தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை
தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை 600 025.

திருச்சிற்றம்பலம்



# மரபுவழி பண்ணிசைப் பயிற்சி
## (அடிப்படை நிலை)

## அறிமுகம்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் வழங்கப்படும் மரபுவழிப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புகள் அடிப்படை நிலை, மேல்நிலை என இரு நிலைகளில் வழங்கப்படுகின்றன.

இதன் அடிப்படை நோக்கம் இறைவனைப் போற்றப்படும் பழந்தமிழ் தேவாரப் பதிகப் பாடல்களை அனைவரும் எளிதில் இணையவழியில் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

உயிர்கள் இறைவன்பால் அன்பு செலுத்தி உலக வாழ்வில் உள்ள துன்பங்கள் நீங்கி முக்தி நிலையை அடைய இத்தேவாரப் பதிகங்கள் இறையடிகளார்களால் பாடப்பட்டுள்ளன. இறைவன் அருள் வடிவானவன் அன்புமயமானவன், அவனைப் பாடி பணிவதால் நம் மனதும் ஒருமுகப்படும். கோபம், பொறாமை, வெறுப்பு ஆகிய குற்றங்கள் நீங்கி பிற உயிர்களிடத்து அன்பு செலுத்துதல், தொண்டு புரிதல் அனைவரும் சமம் என்று எண்ணுதல் ஆகிய நற்குணங்கள் நமக்கு ஏற்படும். இந்த அடிப்படை நிலை பாடத்திட்டத்தில் உள்ள திருப்பதிகங்களின் அமைப்பினையும் அவற்றின் சிறப்பினையும் அறிமுகமாகக் காண்போம்.

### திருமுறை

திருமுறை என்ற சொல் "திருவை" அடையச் செய்யும் நூலுக்குப் பெயராயிற்று. "திரு" என்பது அருளொடு கூடிய சிவபரம்பொருளைக் குறிக்கும். "முறை" என்ற சொல் நூல் என்று பொருள்படும். நிலையான செல்வத்தை அடியார்கள் அடைதற்கு வழிகாட்டும் நூல் திருமுறை. பரம்பொருளாகிய சிவ பெருமான் தம் அடியார்களுக்கு தோன்றாத் துணையாய் நின்று மனச் செம்மையை அருளுகிறான். அம்மெய்யடியார்கள் தம் அனுபவத்தால் கண்டுணர்ந்த அந்த நெறியினை பதிகங்களாக நமக்கு அருளினர். அவர்கள் அருளியவை தேவாரம், திருவாசகம் முதலாக பன்னிரு திருமுறைகளாக தொகுக்கப்பட்டன. இவற்றில் முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் என்று வழங்கப் பெறும்.

இந்த சொல் தேவ–ஆரம் என்றும் தே–வாரம் என்றும் இரு வகையிலும் பொருள் படும். தேவ–ஆரம் என்பது மலரை இணைத்து மாலையாகச் சூட்டுவது போல, சொற்களை இணைத்து சொல்மாலையாக இறைவனுக்குச் சூட்டப்படும் மாலை என்று பொருள்படும்.

தே–வாரம் என்பது தே–தெய்வம், வாரம்–அன்பு, உரிமை என்ற பொருளில், தேவாரம் என்பது தெய்வத்திடம் அன்பை விளைவிப்பது என்றும், இறைவனுக்கும் உயிர்கட்கும் உள்ள தொடர்பை – உரிமையை உள்ளவாறு தெளிவித்து உயிர்கள் பயன்பெற உதவும் பாடல்கள் என்றும் பொருள்படும். "வாரமாய் வணங்குவார் வல்வினைகள் மாயுமே" என்பது திருஞானசம்பந்தர் திருவாக்கு.

இறைவன் திருவருளையே பற்றுக்கோடாகக் கொண்டு ஒழுகும் நெறியைக் காட்டுதலால் இது "திருநெறி" எனவும் வழங்கப் பெறும். திருமுறை பயிற்சியின் மூலம் நல்ல பலனைப் பெறலாம். திருமுறைப் பாடல்களை பயின்று பாடுவதால் ஒழுங்குப் படுத்தப்பட்ட வாழ்க்கை முறையை அடையலாம். இறையருள் பெறலாம்.

## சமயக்குரவர்

இறைவன் மீது பக்தி செலுத்தி, சமய நெறியை உலகம் அறியச் செய்த சான்றோர்கள் சமயக்குரவர்கள் எனப்படுவர். இறைவனான சிவபெருமான்மீது பண்ணோடு கூடிய பாடல்களின் வாயிலாகப் பக்தியைச் செலுத்திய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வர் சமயாசாரியர் அல்லது சமயக்குரவர் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் தேவாரம், திருவாசகம் முதலான பக்திப் பாடல்கள் பாடி இறை வழியில் இறப்பில்லா பெரும் பேறு பெற்றவர்கள் ஆவர். இவர்கள் பற்றிய சிறுகுறிப்பினைக் காண்போம்.

- ### திருஞான சம்பந்தர்

இறைவன் பாலைக் கொடுத்து ஞானசம்பந்தரை ஆட்கொண்டார். ***போதையார் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாதெனத் தாதையார் முனிவுறத் தான்எனை ஆண்டவன்*** என்பது ஞானசம்பந்தர் அகச்சான்று.

**திருஞானசம்பந்தர்**, சமயக்குரவர்கள் நால்வரில் முதன்மையானவராகப் போற்றப்படுபவர். இவர் பிறந்த ஊர் சீர்காழி. இவரது தந்தையார் சிவபாதஇருதயர், தாயார் பகவதி அம்மையார். தமது 3–வது வயதிலேயே சிவபெருமான் அருளால், அம்பிகையிடம் இருந்து சிவஞான பால் அருந்தியவர். இவர் வாழ்ந்த காலம் 7–ஆம் நூற்றாண்டு. இவர் கிரியை மார்க்கத்தால் (பூசனை புரியும் நெறி) இறைவன் அருளைப் பெற்றவர். 1,2, 3, என முதல் மூன்று தேவார திருமுறைகள் இவர் அருளியவையாகும். இவர் அருளியவை **திருக்கடைக்காப்பு** என்று அழைக்கப்படுகிறது. இவர் இறைவனைத் தனது தாய் தந்தையாக பாவித்து பக்தி செலுத்தினார். 16 வயது வரை வாழ்ந்த இவர், ஆச்சாள்புரம் என்று அழைக்கப்படும் திருநல்லூர் பெருமணத்தில் தமது திருமண விழாவில் எழுந்த பெருஞ்சோதியில் **காதலாகிக் கசிந்து** என்று பதிகம் அருளி அச்சோதியில் கலந்து இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

- **திருநாவுக்கரசர்**

இறைவன் சூலை கொடுத்து நாவுக்கரசரை ஆட்கொண்டார். ***சூலை தீர்த்து அடியேனை ஆட்கொண்டாரே*** என்பது நாவரசர் அகச்சான்று.

சமயக்குரவர்கள் நால்வரில், இரண்டாவதாக வைத்து போற்றப்படுபவர், **திருநாவுக்கரசர்**. இவரது இயற்பெயர் **மருள் நீக்கியார்** என்பதாகும். இவரை 'அப்பர் என்றும் அழைப்பார்கள். இவரது தந்தையார் புகழனார், தாயார் மாதினியார். இவர் வாழ்ந்தது 7–ஆம் நூற்றாண்டு ஆகும். திருஞானசம்பந்தரின் சமகாலத்தில் வாழ்ந்தவர் இவர். கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே உள்ள திருவாமூர் தலத்தில் பிறந்தவர்.

இவர் சரியை மார்க்கத்தால் (தொண்டு நெறி) இறைவன் அருளைப் பெற்றவர். இவரது நாவில் இருந்து பிறந்த இனிய பாடல்களைக் கேட்டு இரசித்து இறைவனே இவருக்கு **நாவுக்கரசர்** என்ற பெயரைச் சூட்டி அருளினார். இவர் பாடிய பதிகப்பாடல்கள் 4,5,6 என்று அடுத்த தேவாரப் பாடல்களாகப் பன்னிரு திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளது. இவர் இறைவனைத் தலைவனாகவும், தன்னைத் தொண்டனாகவும் கருதி வழிப்பட்டார். 81ஆம் வயது வரை வாழ்ந்த இவர், திருப்புகலூர் என்ற தலத்தில் **புண்ணிய உன்னடிக்கே போதுகின்றேன்** என்று பதிகம் அருளி இறைவனோடு ஒன்றி முக்தியடைந்தார்.

- **சுந்தரர்**

இறைவன் ஓலை கொடுத்து சுந்தரரை ஆட்கொண்டார். ***அன்று வந்தெனை அகலிடத்தவர் முன் ஆளதாக என்று ஆவணம் காட்டி நின்று வெண்ணெய் நல்லூர் மிசை ஒளித்த*** என்பது சுந்தரர் அகச்சான்று.

சமயக்குரவர்களில் மூன்றாவதாக வைத்து வணங்கப்படுபவர் **சுந்தரமூர்த்தி**. இவர் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள திருநாவலூர் என்ற திருத்தலத்தில் பிறந்தார். இவரது தந்தையார் சடையனார், தாயார் இசைஞானியார். இவரது காலம் 7–ஆம் நூற்றாண்டின் இறுதியும், 8–ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகும். சிறு பருவத்திலேயே இல்லற வாழ்வில் நுழைய இருந்த இவரை முதியவர் வேடத்தில் வந்த சிவபெருமான் தடுத்தாட்கொண்டு, அவரை இறைவழியில் செல்ல வைத்த தலம் திருவெண்ணெய்நல்லூர் ஆகும். இவர் யோக மார்க்கத்தில் (யோக நெறி) பக்தி செலுத்தி இறைவன் அருளைப் பெற்றவர். இவர் பாடிய பதிகப்பாடல் 7–ஆம் திருமுறையாக தொகுக்கப்பட்டுள்ளது,

இறைவனை தன்னுடைய தோழனாக நினைத்து வழிப்பட்டதால் **என்பிரான் தோழர்** என்னும் பெயரைப் பெற்றார். இவர் கேரள மாநிலத்தில் உள்ள 'திருஅஞ்சைக்களம்' என்னும் திருத்தலத்தில் இறைவனால் வெள்ளானை அனுப்பப் பெற்று அதில் ஏறி களையா உடலுடன் **தான் எனை முன் படைத்தான்** என்ற பதிகம் பாடிய படி திருக்கயிலாயம் சென்றடைந்தார். பதிகத்தின் இறுதியில் வருண பகவானிடம் அந்தப் பதிகத்தை திருஅஞ்சைக்களத்து அஞ்சையப்பரிடன் சேர்பிக்குமாறு வேண்டிக்கொண்டார். இத்திருத்தலம் தற்போது 'திருவஞ்சிக்குளம்' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

- **மாணிக்கவாசகர்**

இறைவன் காலைக்காட்டி மாணிக்கவாசகரை ஆட்கொண்டார். ***இணையார் திருவடி என் தலைமேல் வைத்தலுமே, துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்*** என்பது மாணிக்கவாசகர் அகச்சான்று.

சமயக்குரவர்களில் நான்காவதாக வைத்து போற்றப்படுவர் **மாணிக்கவாசகர்** ஆவார். இவர் பிறந்த ஊர் திருவாதவூர். இதனால் இவரை **திருவாதவூரர்** என்றும் அழைப்பர். இவரது தந்தையார் சம்புபாதாசிருதர், தாயார் சிவஞானவதி. இவரது காலம் சரிவர அறியப்படவில்லை. 3–ஆம் நூற்றாண்டு எனச் சிலரும், 9–ஆம் நூற்றாண்டு எனச் சிலரும் கருதுகின்றனர். திருப்பெருந்துறை என்ற ஊரில் சிவபெருமானே குருவாக வந்து திருவடித்தீக்கை அருள ஞானம் பெற்றார். இவர் அங்கு ஆவுடையார் கோவில் என்னும் கோவிலைக் கட்டினார்.

இவர் ஞான மார்க்கத்தால் (ஞான நெறி) இறைவன் மீது பக்தி செலுத்தினார்.

பன்னிருதிருமுறையில் இவரது **திருவாசகம், திருக்கோவையார்** எட்டாம் திரு முறையாக வைக்கப்பட்டுள்ளது. அவற்றை சிவபெருமானே தம் திருக்கரத்தால் எழுதினார். நூலின் முடிவில் 'மாணிக்கவாசகர் சொற்படி திருச்சிற்றம்பலமுடையான் கையெழுத்து' எனத் திருச்சாத்திட்டு தில்லைச் சிற்றம்பலத்தில் பஞ்சாக்கரப் படியில் வைத்தார். காலையில் நூலைக் கண்ட அருச்சகர்கள் அதன் முடிவில் 'மாணிக்கவாசகர் சொற்படி திருச்சிற்றம்பலமுடையான் கையெழுத்து' என்று இருந்ததைக் கண்டு உடல் சிலிர்த்து இறைவன் திருவருளைப் பெறுவதற்குரிய நூல்களில் இது தலையானது என்று உணர்ந்து மாணிக்கவாசகரிடம் சென்று நடந்ததைக் கூறி இந்நூலின் பொருளை தங்கள் விளக்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதற்கு அவர் இந்நூலின் பொருளை தில்லை சிற்றம்பலத்தில் வந்து தெரிவிக்கிறேன் என்று சொல்லி அவர்களுடன் சிற்சபைக்கு வந்தார். அங்கு வந்து "இந்நூற்பொருள் இச்சபையில் எழுந்தருளி உள்ள ஆனந்தக் கூத்தப்பெருமானே ஆவான்" என்று காட்டி, அம்பலத்தில் சிவனுடன் ஒன்றி மறைந்தருளினார். நடராஜப் பெருமான் மாணிக்கவாசகருக்கு, தம் திருவடிகளிலே இரண்டறக் கலக்கும் பேரின்பப் பேற்றைத் தந்து அவரை ஆட்கொண்டு அருளினார்.

## பொருளடக்கம்

| வரிசை எண் | வகுப்பு எண் | பாடத்தலைப்பு | பதிகத்தைஅருளியவர் | திருமுறைஎண் மற்றும் பதிகஎண் |
|---|---|---|---|---|
| 1. | 1 | நால்வர்துதி | உமாபதிசிவம் | – |
| 2. | | விநாயகர்துதி | திருஞானசம்பந்தர் | 1 – 123 |
| | | tamilvu.org/slet/l4110/l4110uri.jsp?song_no=1330&book_id=109&head_id=59&sub_id=1650 | | |
| 3. | | முருகன்துதி | திருநாவுக்கரசர் | 5 – 019 |
| | | tamilvu.org/slet/l4150/l4150uri.jsp?song_no=1262&book_id=113&head_id=63&sub_id=2037 | | |
| 4. | 2 | மூவர்முதல்திருப்பதிகங்கள் | திருஞானசம்பந்தர் | 1 – 01 |
| | | tamilvu.org/slet/l4110/l4110uri.jsp?song_no=1&book_id=109&head_id=59&sub_id=1529<br><br>https://www.tamilvu.oor/library/l4110/audia/l4110au1.mp3 | https://www.tamilvu.org/slet/l4110/l4110uri.jsp?song_no=11&book_id=109&head_id=59&sub_id=1529<br><br>https://www.tamilvu.org/library/l4110/audio/l4110au11.mp3 | |
| 5. | 3 | மூவர்முதல்திருப்பதிகங்கள் | திருநாவுக்கரசர் | 4 – 01 |
| | | https://www.tamilvu.org/slet/l4140/l4140uri.jsp?song_no=1&book_id=112&head_id=62&sub_id=1912 | tamilvu.org/slet/l4140/l4140uri.jsp?song_no=10&book_id=112&head_id=62&sub_id=1912 | |
| 6. | 4 | மூவர்முதல்திருப்பதிகங்கள் | சுந்தரர் | 7 – 01 |
| | | https://www.tamilvu.org/slet/l4170/l4170uri.jsp?song_no=426&book_id=115&head_id=65&sub_id=2211<br><br>https://www.tamilvu.org/library/l | https://www.tamilvu.org/slet/l4170/l4170uri.jsp?song_no=439&book_id=115&head_id=65&sub_id=2211 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 4170/audio/01.mp3 | https://www.tamilvu.org/library/l4170/audio/10.mp3 | |
| 7. | 5 | பொது பதிகங்கள் | திருஞானசம்பந்தர் | 2 – 085 |
| | | https://www.tamilvu.org/slet/l4120/l4120uri.jsp?song_no=2388&book_id=110&head_id=60&sub_id=1748 | https://www.tamilvu.org/slet/l4120/l4120uri.jsp?song_no=2398&book_id=110&head_id=60&sub_id=1748 | |
| 8. | 6 | பொது பதிகங்கள் | திருநாவுக்கரசர் | 4 –009 |
| | | https://www.tamilvu.org/slet/l4140/l4140uri.jsp?song_no=82&book_id=112&head_id=62&sub_id=1920<br><br>https://www.tamilvu.org/slet/l4140/l4140uri.jsp?song_no=83&book_id=112&head_id=62&sub_id=1920 | https://www.tamilvu.org/slet/l4140/l4140uri.jsp?song_no=89&book_id=112&head_id=62&sub_id=1920<br><br>https://www.tamilvu.org/slet/l4140/l4140uri.jsp?song_no=93&book_id=112&head_id=62&sub_id=1920 | |
| 9. | 7 | பொது பதிகங்கள் | சுந்தரர் | 7 – 063 |
| | | https://www.tamilvu.org/slet/l4170/l4170uri.jsp?song_no=959&book_id=115&head_id=65&sub_id=2272 | https://www.tamilvu.org/slet/l4170/l4170uri.jsp?song_no=965&book_id=115&head_id=65&sub_id=2272 | |
| 10. | 8 | அற்புத பதிகங்கள்– I | திருஞானசம்பந்தர் | 2 – 047 |
| | | https://www.tamilvu.org/slet/l4120/l4120uri.jsp?song_no=1971&book_id=110&head_id=60&sub_id=1710 | https://www.tamilvu.org/slet/l4120/l4120uri.jsp?song_no=1981&book_id=110&head_id=60&sub_id=1710 | |
| 11. | 9 | அற்புத பதிகங்கள்– I | திருநாவுக்கரசர் | 4 – 018 |
| | | https://www.tamilvu.org/slet/l4140/l4140uri.jsp?song_no=177& | https://www.tamilvu.org/slet/l4140/l4140uri.js | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | book_id=112&head_id=62&sub_id=1929 | p?song_no=186&book_id=112&head_id=62&sub_id=1929 | |
| 12. | 10 | அற்புத பதிகங்கள்– I | சுந்தரர் | 7 – 025 |
| | | https://www.tamilvu.org/slet/l4170/l4170uri.jsp?song_no=623&book_id=115&head_id=65&sub_id=2233 | https://www.tamilvu.org/slet/l4170/l4170uri.jsp?song_no=657&book_id=115&head_id=65&sub_id=2237 | |
| 13. | 11 | மீள்பயிற்சி | கற்றுக்கொண்டபதிகங்கள் | – |
| | | | | |
| 14. | 12 | அற்புதபதிகங்கள் – II | திருஞானசம்பந்தர் | 2 –018 |
| | | https://www.tamilvu.org/slet/l4120/l4120wpm1.jsp?song_no=1655&book_id=110 | https://www.tamilvu.org/slet/l4120/l4120uri.jsp?song_no=1665&book_id=110&head_id=60&sub_id=1681 | |
| 15. | 13 | அற்புதபதிகங்கள் – II | திருநாவுக்கரசர் | 4 – 011 |
| | | https://www.tamilvu.org/slet/l4140/l4140uri.jsp?song_no=104&book_id=112&head_id=62&sub_id=1922 | https://www.tamilvu.org/slet/l4140/l4140uri.jsp?song_no=111&book_id=112&head_id=62&sub_id=1922 | https://www.tamilvu.org/slet/l4140/l4140uri.jsp?song_no=113&book_id=112&head_id=62&sub_id=1922 |
| 16. | 14 | அற்புதபதிகங்கள் – II | சுந்தரர் | 7 – 092 |
| | | https://www.tamilvu.org/slet/l4170/l4170uri.jsp?song_no=1211&book_id=115&head_id=65&sub_id=2301 | https://www.tamilvu.org/slet/l4170/l4170uri.jsp?song_no=1220&book_id=115&head_id=65&sub_id=2301 | |
| 17. | 15 | சிறப்பு பதிகங்கள்–I | திருஞானசம்பந்தர் | 3 –024 |
| | | https://www.tamilvu.org/slet/l4130/l4130uri.jsp?song_no=3052&book_id=111&head_id=61&s | https://www.tamilvu.org/slet/l4130/l4130uri.jsp?song_no=3062&boo | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ub_id=1809 | k_id=111&head_id=61&sub_id=1809 | |
| 18. | 16 | சிறப்பு பதிகங்கள்–I | திருநாவுக்கரசர் | 5 – 090 |
| | | https://www.tamilvu.org/slet/l4150/l4150uri.jsp?song_no=1954&book_id=113&head_id=63&sub_id=2101 | https://www.tamilvu.org/slet/l4150/l4150uri.jsp?song_no=1955&book_id=113&head_id=63&sub_id=2101 | https://www.tamilvu.org/slet/l4150/l4150uri.jsp?song_no=1963&book_id=113&head_id=63&sub_id=2101 |
| 19. | 17 | சிறப்பு பதிகங்கள்–I | சுந்தரர் | 7 –059 |
| | | https://www.tamilvu.org/slet/l4170/l4170uri.jsp?song_no=923&book_id=115&head_id=65&sub_id=2268 | https://www.tamilvu.org/slet/l4170/l4170uri.jsp?song_no=931&book_id=115&head_id=65&sub_id=2268 | |
| 20 | 18 | சிறப்பு பதிகங்கள்– II | திருஞானசம்பந்தர் | 3 –022 |
| | | https://www.tamilvu.org/slet/l4130/l4130wpm1.jsp?song_no=3031&book_id=111 | tamilvu.org/slet/l4130/l4130uri.jsp?song_no=3041&book_id=111&head_id=61&sub_id=1807 | |
| 21. | 19 | சிறப்பு பதிகங்கள்– II | திருநாவுக்கரசர் | 5 – 01 |
| | | https://www.tamilvu.org/slet/l4150/l4150uri.jsp?song_no=1071&book_id=113&head_id=63&sub_id=2025 | https://www.tamilvu.org/slet/l4150/l4150uri.jsp?song_no=1081&book_id=113&head_id=63&sub_id=2025 | |
| 22 | 20 | சிறப்பு பதிகங்கள்– II | சுந்தரர் | 7 – 024 |
| | | https://www.tamilvu.org/slet/l4170/l4170uri.jsp?song_no=623&book_id=115&head_id=65&sub_id=2233 | https://www.tamilvu.org/slet/l4170/l4170uri.jsp?song_no=628&book_id=115&head_id=65&sub_id=2233 | |
| 23 | 21 | பஞ்சபுராணம் – I | தேவாரம் | 2 – 106 |
| | | https://www.tamilvu.org/slet/l4120/l4120uri.jsp?song_no=2616&book_id=110&head_id=60&s | https://www.tamilvu.org/slet/l4120/l4120uri.jsp?song_no=2626&boo | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ub_id=1769 | k_id=110&head_id=60&sub_id=1769 | |
| 24 | | | திருவாசகம் | 8 – 037 |
| | | | https://www.tamilvu.org/slet/l4180/l4180uri.jsp?song_no=668&book_id=116&head_id=66&sub_id=2355 | |
| 25 | | | திருவிசைப்பா | 9 – 005 |
| 26 | 22 | பஞ்சபுராணம் – I | திருப்பல்லாண்டு | 9 – 029 |
| 27 | | | பெரியபுராணம் | 12 – 28–659 |
| 28 | | | | |
| 29 | 23 | பஞ்சபுராணம் – II | தேவாரம் | 6 –054 |
| 30 | | https://www.tamilvu.org/slet/l4160/l4160uri.jsp?song_no=548&book_id=114&head_id=64&sub_id=2164 | | |
| 31. | | https://www.tamilvu.org/slet/l4180/l4180uri.jsp?song_no=516&book_id=116&head_id=66&sub_id=2340 | திருவாசகம் | 8 – 022 |
| 32 | | | திருவிசைப்பா | 09 – 068 |
| 33 | | | திருப்பல்லாண்டு | 09 – 029 |
| 34 | | | பெரியபுராணம் | 12 – 00 – 253 |
| 35 | | | | |
| 36 | 24 | மீள்பயிற்சி | கற்றுக்கொண்டபதிகங்கள் | – |

| வரிசை எண் | வகுப்பு எண் | பாடத்தலைப்பு | பதிகத்தை அருளியவர் | திருமுறை எண் மற்றும் பதிகஎண் |
|---|---|---|---|---|
| 1. | 1 | **நால்வர் துதி** (பூழியர் கோன்) | உமாபதிசிவம் | – |
| 2. | | **விநாயகர் துதி** (பிடி அதன் உரு) | திருஞானசம்பந்தர் | 1 – 123 |
| 3. | | **முருகன் துதி** (நம் கடம்பனை) | திருநாவுக்கரசர் | 5 – 019 |
| 4. | 2 | **மூவர் முதல்திருப்பதிகங்கள்** (தோடுடைய செவியன்) | திருஞானசம்பந்தர் | 1 – 01 |
| 5. | 3 | **மூவர் முதல்திருப்பதிகங்கள்** (கூற்றாயினவாறு) | திருநாவுக்கரசர் | 4 – 01 |
| 6. | 4 | **மூவர் முதல்திருப்பதிகங்கள்** (பித்தா பிறைசூடி) | சுந்தரர் | 7 – 01 |
| 7. | 5 | **பொது பதிகங்கள்** (வேயுறு தோளி ) | திருஞானசம்பந்தர் | 2 – 085 |
| 8. | 6 | **பொது பதிகங்கள்** ( தலையே நீ ) | திருநாவுக்கரசர் | 4 –009 |
| 9. | 7 | **பொது பதிகங்கள்** (மெய்யை முற்றப் போடி பூசி ஓர் நம்பி) | சுந்தரர் | 7 – 063 |
| 10. | 8 | **அற்புத பதிகங்கள்– I** (மட்டிட்ட புன்னையும்) | திருஞானசம்பந்தர் | 2 – 047 |
| 11. | 9 | **அற்புத பதிகங்கள்– I** (ஒன்று கொலாம்) | திருநாவுக்கரசர் | 4 – 018 |
| 12. | 10 | **அற்புத பதிகங்கள்– I** (பொன் செய்த மேனியினீர்) | சுந்தரர் | 7 – 025 |
| 13. | 11 | **மீள்பயிற்சி** | கற்றுக்கொண்டபதிகங்கள் | – |
| 14. | 12 | **அற்புத பதிகங்கள் – II** (சடையாய் எனுமால்) | திருஞானசம்பந்தர் | 2 –018 |
| 15. | 13 | **அற்புத பதிகங்கள் – II** (சொற்றுணை வேதியன்) | திருநாவுக்கரசர் | 4 – 011 |
| 16. | 14 | **அற்புத பதிகங்கள் – II** (எற்றான் மறக்கேன்) | சுந்தரர் | 7 – 092 |
| 17. | 15 | **சிறப்பு பதிகங்கள்–I** (மண்ணில் நல்ல வண்ணம்) | திருஞானசம்பந்தர் | 3 –024 |
| 18. | 16 | **சிறப்பு பதிகங்கள்–I** (மாசில் வீணையும்) | திருநாவுக்கரசர் | 5 – 090 |
| 19. | 17 | **சிறப்பு பதிகங்கள்–I** (பொன்னும் மெய் பொருளும்) | சுந்தரர் | 7 –059 |

| | | | | |
|---|---|---|---|---|
| 20. | 18 | **சிறப்பு பதிகங்கள்– II** (துஞ்சலும் துஞ்சலிலாத) | திருஞானசம்பந்தர் | 3 –022 |
| 21. | 19 | **சிறப்பு பதிகங்கள்– II** (அன்னம் பாலிக்கும்) | திருநாவுக்கரசர் | 5 – 01 |
| 22. | 20 | **சிறப்பு பதிகங்கள்– II** (பொன்னார் மேனியனே) | சுந்தரர் | 7 – 024 |
| 23. | 21 | **பஞ்சபுராணம் – I** | **தேவாரம்** (என்ன புண்ணியம்) | 2 – 106 |
| 24. | | | திருவாசகம் (பால் நினைந்து) | 8 – 037 |
| 25. | | | திருவிசைப்பா (கற்றவர்) | 9 – 005 |
| 26. | 22 | **பஞ்சபுராணம் – I** | திருப்பல்லாண்டு (மன்னுக) | 9 – 029 |
| 27. | | | பெரியபுராணம் (சென்ற காலத்தின்) | 12 – 28– 659 |
| 28. | 23 | **பஞ்சபுராணம் – I I** | தேவாரம் (பேராயிரம் பரவும்) | 6 –054 |
| 29. | | | திருவாசகம் (குறைவிலா) | 8 – 022 |
| 30. | | | திருவிசைப்பா (பத்தியாய்) | 09 – 068 |
| 31. | | | திருப்பல்லாண்டு (ஆரார் வந்தார்) | 09 – 029 |
| 32. | | | பெரியபுராணம் (தெண்ணிலா மலர்ந்த) | 12 – 00 – 253 |
| 33. | 24 | **மீள்பயிற்சி** | கற்றுக்கொண்டபதிகங்கள் | – |

## முன்னுரை

அடிப்படைநிலையில் தேவாரத்தில் திருஞானசம்பந்தர், நாவுக்கரசர் மற்றும் சுந்தரர் பாடிய தேவாரப் பாடல்கள் பாடமாக உள்ளது. பாடல்கள் துதியுடன் ஆரம்பித்து ஒவ்வொரு பதிகங்களிலும் முதல் மற்றும் கடைசிப் பாடல்களும், அப்பாடலின் பண், ராகம், தாளம், பாடல் கள்பாடப்பெற்ற தலங்கள், இறைவன்– இறைவி, அப்பாடல்களைப் பாடுவதால் பெறும் பயன் மற்றும் சிறப்புடன், பாடலின் பொருள் விளக்கமும் வழங்கப்பட்டுள்ளது.

**வகுப்பு–1**

**நால்வர் துதி**

சைவத் திருமுறைகளைப் பாடத் துவங்கு முன் சைவ குரவர் நால்வரையும் வாழ்த்துவது மரபாகும்.

**அருளியவர் –** உமாபதிசிவம் **இராகம் –** கம்பீரநாட்டை **தாளம் –** ரூபகம்

**பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி**
**ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி**
**வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி**
**ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி**

**விளக்கம் :**

இப்பாடலில், ஒவ்வொரு அடியும் சைவ குரவர்களில் ஒவ்வொருவரைக் குறிக்கும்.

**முதலாம்**அடி **திருஞானசம்பந்தரைக்** குறிப்பதாகும் **–**
பூமியை ஆளுகிற அரசன் (கூன் பாண்டியன்) வெப்பு நோய் தீர்த்த, சரண்புகுபவர்களின் காவலனாகிய புகலிநகர் சம்பந்தரின் கழலடிகளைப் போற்றுவோம்.
**இரண்டாம்**அடி **அப்பர் என்று அழைக்கப்பெறும் திருநாவுக்கரசரைக்** குறிப்பதாகும் **–** "கற்றுணைப் பூட்டி ஓர்கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே.." என்று கல்லையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய பிரானாகிய திருநாவுக்கரசர் அடிகளைப் போற்றுவோம்.
**மூன்றாம்**அடி **ஆலாலசுந்தரரைக்** குறிப்பதாகும் **–**
திருநாவலூரில் பிறந்த சுந்தரர் எனும் வன்தொண்டரின் பாதங்களைப் போற்றுவோம். இறைவனைப் பாடும் போது, வசை மொழிகளால் "பித்தா" எனப் பாடியதால் வன்தொண்டர் என்ற பெயரும், சுந்தரருக்கு உண்டு.
**நான்காம்**அடி **மாணிக்கவாசகரைக்** குறிப்பதாகும் **–**
உலகம் உய்ய தம் அன்பால் இறைவனைச் சிக்கெனப் பிடித்த திருவாதவூரில் பிறந்த மாணிக்கவாசகரின் திருவடிகளைப் போற்றுவோம்.

**விநாயகர் துதி**

**அருளியவர்** : திருஞானசம்பந்தர்
**திருமுறை :** முதல் திருமுறை பதிகம்: **123** பாடல் : **5**

**தலம் :** திருவலிவலம்

**பண்** : வியாழக்குறிஞ்சி **இராகம்** : சௌராஷ்டிரம் **தாளம் :** ஆதி

**பிடியத னுருவுமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்**
**கடிகண பதிவர வருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.** 1.123.5

பிடி அதன் உரு உமை கொள மிகு கரி அது
வடிகொடு தனது அடி வழிபடுமவர் இடர்
கடி கணபதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலிவலம் உறை இறையே.

**விளக்கம் :**

மிகுதியான வள்ளற் பெருமக்கள் வாழும் வலிவலத்தில் உறையும் இறைவன், உமையம்மை பெண்யானை வடிவுகொள்ள, தான் ஆண்யானையின் வடிவு கொண்டு தன் திருவடியை வணங்கும் அடியவர்களின் இடர்களைக் நீக்கும் பொருட்டு கணபதியைத் தோற்றுவித் தருளினான்.

**முருகன் துதி**

**அருளியவர் :** திருநாவுக்கரசர் **திருமுறை :** ஐந்தாம் திருமுறை **பதிகம் :** 19 **பாடல் : 9**
**தலம் :** திருக்கடம்பூர்
**பாடல் அமைப்பு** : திருக்குறுந்தொகை **இராகம்** : மாயாமாளவகெளளை **தாளம்** : ஆதி

**நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்**
**தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்**
**தன்கடன்னடி யேனையுந் தாங்குதல்**
**என்கடன் பணிசெய்து கிடப்பதே** 5.19.9

நன் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக்கோயிலான்
தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே

**விளக்கம்** :

நம்மால் விரும்பி போற்றப்படும் கடம்பமாலை சூடிய நம் முருகனைப் பெற்ற உமாதேவியினைத் தன் ஒருபாகத்தில் உடையவனாகிய அழகிய (தென்) கடம்பைத் திருக்கரக்கோயிலில் உறையும் பெருமானின் கடன் அடியேன் போன்றோரைத் தாங்குதல், என் போன்றோர் கடன் "எல்லாம் அவன் அருள் வழிச் செயலே அன்றி என் செயல் என்பது சிறிதும் இல்லை" என்று தற்போதம் இன்றி இருத்தல்.

வகுப்பு– 2 மூவர் முதல் திருப்பதிகங்கள் – ஓர் அறிமுகம்

## திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தர் அருளிய திருக்கடைக் காப்பு.
**திருமுறை** : முதல் திருமுறை முதல் திருப்பதிகம்.
**தலம்** : திருபிரமபுரம் (சீர்காழி)
**பண்** : நட்டபாடை **இராகம்** : கம்பீர நாட்டை **தாளம்** : ரூபகம்.
**இறைவன் :** பிரமபுரீஸ்வரர் **இறைவி** : திருநிலைநாயகி
**பயன் :** ஞானமும் கல்வியும் பெற ஓத வேண்டிய பதிகம்.
**சிறப்பு :** மூன்று வயது குழந்தையான திருஞானசம்பந்தர் இறையருளால் ஞானப்பால் உண்டு இறைவனைப் புகழ்ந்து பாடிய முதல் பதிகம்.

**தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்**
**காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்**
**ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த**
**பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.** 1.001.1

தோடு உடைய செவியன் விடை ஏறி ஓர் தூ வெண்மதி சூடி
காடு உடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடு உடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த அருள்செய்த
பீடு உடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே

**விளக்கம்** :

தோடு அணிந்த திருச்செவியை உடைய உமையம்மையை இடபாகத்தே உடையவனாய், விடை மீது ஏறி, ஒப்பற்ற தூய வெண்மையான பிறையைச் சடைமுடிமேல் சூடி சுடுகாட்டில் விளைந்த சாம்பல் பொடியை உடல் முழுதும் பூசி வந்து என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன். அழகிய இதழ்களை உடைய தாமரை மலரில் விளங்கும் நான்முகன் படைத்தல் தொழில் வேண்டி முன்னை நாளில் வந்து வழிபட, அவனுக்கு அருள்புரிந்த பெருமை மிக்க பிரமபுரத்தில் எழுந்தருளியுள்ள பெருமான் இவன் அல்லவா!

**காப்பு** :

**அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கைஅலர்மேய**
**பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன்றன்னை**
**ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன்உரை செய்த**
**திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தல்எளிதாமே.** 1.001.11

அருநெறிய மறை வல்ல முனி அகன் பொய்கை அலர் மேய
பெரு நெறிய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் தன்னை
ஒரு நெறிய மனம் வைத்து உணர் ஞானசம்பந்தன் உரை செய்த
திரு நெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதுஆமே.

**விளக்கம்** :

அருமையான நெறிகளை உலகிற்கு வழங்கும் வேதங்களில் தேர்ந்த பிரமனால் படைக்கப்பட்டதும், அகன்ற குளத்தில் தாமரை மலர்களையுடையதும் ஆகிய பிரமபுரத்துள் எழுந்தருளும் முத்தி நெறி சேர்க்கும் முதல்வனை, ஒருமைப்பாடுடன் மனத்தில் அகலாது பதித்து உணரும் ஞானசம்பந்தன் போற்றி உரைத்தருளிய திருநெறியாகிய அருநெறியை உடைய தமிழில் இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர்களின் பழவினைகள் தீர்தல் எளிதாகும். ஊழ்வினை தீர்வதற்குரிய மார்க்கங்கள் பல இருப்பினும், இத்திருப்பதிகத்தை ஓதுதலே எளிமை வாய்ந்த வழியாகும்.

**வகுப்பு – 3 மூவர் முதல் திருப்பதிகங்கள் – ஓர் அறிமுகம்**

**திருநாவுக்கரசர்**

திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

**திருமுறை** : நான்காம் திருமுறை முதலாம் பதிகம்

**தலம்** : திருவதிகையில் உள்ள திருவீரட்டானம் கோயில்

**பண்**: கொல்லி **இராகம்**: நவரோஸ் **தாளம்**: ஆதி

**இறைவன் :** வீரட்டானேஸ்வரர் **இறைவி** : திரிபுரசுந்தரி.

**பயன் :** வயிற்றுவலி முதலிய உடல் நோய்கள் நீங்க ஓத வேண்டிய பதிகம்.

**சிறப்பு :** திருநாவுக்கரசர் தமது தமக்கையின் வேண்டுதலால், சமண சமயத்திலிருந்து நீங்க காரணமாக இருந்த சூலை நோயினால் அவதியுற்ற போது சைவ சமயத்திற்கு மீண்டும் வந்து சூலை நீங்க பாடிய பதிகம்.

**கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நான்அறியேன்**
**ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்**
**தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட**
**ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.** 4.001.1

கூற்று ஆயின ஆறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டானத்து உறை அம்மானே

**விளக்கம்** :

கெடிலஆற்றின் வடகரையில் விளங்கும் திருவதிகை என்னும் வீரட்டானத் திருப்பதியில் விரும்பி எழுந்தருளியிருக்கும் தலைவனே ! யான் இப்பிறப்பில் என்அறிவு அறிய பல கொடுஞ்செயல்களைச் செய்ததாகப் புலப்படவில்லை. ஆனால் இச்சூலை நோய் யாருக்கும் புலப்படாத வகையில் என் வயிற்றினுள் குடலோடு ஏனைய உள்உறுப்புகளைக் கட்டிச் செயற்படாமல் மடக்குகின்றது. அடியேன் அவ்வலியைப் பொறுக்க இயலாதேனாக உள்ளேன். கூற்றுவனைப் போல அந்நோய் என்னைத் துன்புறுத்துகின்றது. அனைத்து நோய்களையும் நீக்கும் ஆற்றலுடையீர்! நீரே இந்நோயை குணப்படுத்த வேண்டும். அப்பொழுது தான் இச்சிறியேன் எப்பொழுதும் காளை மீது ஊரும் உம் அடிக்கண் நீங்காமல் மனத்தால் துணிவும், தலையால் தணிவும், மொழியால் பணிவும் தோன்ற வணங்குவேன். எனவே இவ்வடியேனின் பிழைகளைப் பொறுத்து அருள்வீர்களாக!

**கடைசிபத்து** :

**போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல் புறங்காடரங் காநட மாடவல்லாய்**
**ஆர்த்தான்அரக் கன்றனை மால்வரைக்கீழ் அடர்த்திட் டருள்செய்த அதுகருதாய்**
**வேர்த்தும்புரண் டும்விழுந் தும்எழுந்தால் என்வேதனை யான விலக்கியிடாய்**
**ஆர்த்தார்புனல் சூழ்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.** 4.001.10

போர்த்தாய் அங்கு ஓர் ஆனையின் ஈர் உரிதோல் புறங்காடு அரங்கா நடம் ஆடவல்லாய்
ஆர்த்தான் அரக்கன் தனை மால் வரைக் கீழ் அடர்த்திட்டு அருள் செய்த அது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால் என் வேதனை ஆன விலக்கியிடாய்
ஆர்த்து ஆர் புனல் சூழ் அதிகைக் கெடில வீரட்டானத்து உறை அம்மானே

**விளக்கம்** :

ஆரவாரித்து நிரம்பும் நீரை உடைய கெடிலக் கரையிலமைந்த திருவதிகை வீரட்டானத் துறையில் விரும்பி அருள உறையும் எம்இறைவனே! முன்பு ஓர் யானையின் தோலைப் அதன் ஈரத்தன்மைப் போகும் முன்னர் போர்த்தவனே ! சுடுகாட்டையே கூத்தாடும் அரங்காகக் கொண்டு கூத்து நிகழ்த்துதலில் வல்லவனே ! ஆரவாரித்துக் கயிலை மலையைப் பெயர்க்க முற்பட்ட இராவணனை அப்பெரிய மலையின் கீழ் நசுக்கிப்பின் அருள்செய்த பெரியோனே! அந்நிகழ்வினை நினைத்துப் பார்த்து, அதுபோல் என் அறியாமையால் செய்த பிழைகளைப் பொறுத்து, வியர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தும் அடியேன் இச்சூலை நோயினால் அனுபவிக்கும் துன்பங்களை நீக்கி அருள வேண்டும்.

**வகுப்பு – 4 மூவர் முதல் திருப்பதிகங்கள் – ஓர் அறிமுகம்**

**சுந்தரர்**

சுந்தரர் அருளிய திருப்பாட்டு

**திருமுறை** : ஏழாம்திருமுறை முதலாம் பதிகம்

**தலம்** : திருவெண்ணெய்நல்லூர்

**பண்**: இந்தளம் **இராகம்**: மாயாமாளவகௌளை **தாளம்**: ரூபகம்

**இறைவன் :** ஆட்கொண்டநாதர் **இறைவி** : வேற்கண்மங்கை

**பயன்** : இறைவன்அருளால் முன்வினைப் பயன் நீங்க ஓதவேண்டிய பதிகம்.

**சிறப்பு** : சுந்தரரை இறைவன் தடுத்து ஆட்கொண்டபோது பாடிய பதிகம்.

**பித்தாபிறை சூடிபெருமானேயரு ளாளா**
**எத்தான்மற வாதேநினைக்கின்றேன்மனத் துன்னை**
**வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்நல்லூரருட் டுறையுள்**
**அத்தாஉனக் காளாய்இனிஅல்லேனென லாமே**.

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள்துறையுள்
அத்தா உனக்கு ஆள் ஆய் இனி அல்லேன் எனல் ஆமே

**விளக்கம்** :

பித்தனே! பிறையைக் கண்ணியாகச் சூடிய பெருமை வாய்ந்த அருளாளனே, பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய்நல்லூரி**ல், "**அருட்டுறை**"**என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தலைவனே, எனது நெஞ்சத்துள் உன்னை அகலாது வைத்தருளினாய்; அதனால், எவ்வாற்றானும் உன்னை மறவாமலே நினைந்து முன்பே உனக்கு அடியவனாகிவிட்டேன். இப்பொழுது, "உனக்கு அடியவன் அல்லேன்", என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

**கடைசிபத்து** :

**காரூர்புன லெய்திக்கரைகல்லித்திரைக் கையால்**
**பாரூர்புக ழெய்தித்திகழ்பன்மாமணி யுந்திச்**
**சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்நல்லூரருட் டுறையுள்**
**ஆரூரன்எம் பெருமாற்காள் அல்லேன்என லாமே.**

கார் ஊர் புனல் எய்தி கரை கல்லித் திரைக் கையால்
பார் ஊர் புகழ் எய்தி, திகழ் பல் மா மணி உந்தி
சீர் ஊர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள்துறையுள்
ஆரூரன் எம்பெருமாற்கு ஆள் அல்லேன் எனல் ஆமே

**விளக்கம்** :

மேகத்தினின்றும் பொழியும் மழைநீரைப் பெற்று அலைகளாகிய கைகளால் கரையைத் தொட்டு விளங்குவதால் நிலம் முழுதும் பரவிய புகழைப்பெற்று, ஒளி விளங்குகின்ற பல சிறந்த மணிகளைக் கொண்டுவந்து கொடுக்கும் அழகு மிகுந்த பெண்ணையாற்றின் தெற்கு பக்கத்தில் உள்ள திருவெண்ணெய்நல்லூரில் உள்ள அருட்டுறைத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு ஆரூரன் "அடியவன்அல்லேன்" என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

**திருஞானசம்பந்தர்**

திருஞானசம்பந்தர் அருளிய திருக்கடைக் காப்பு

**திருமுறை** : 2- ஆம் திருமுறை **பதிகம் :** 085

**தலம்** : பொது

**பண்** : பியந்தைக்காந்தாரம் **இராகம்** : நவரோசு **தாளம்** : திஸ்ர திரிபுடை

**பயன் :** நவகோள்களினால் வரும் தீமைவிலகி நன்மை உண்டாக ஓதவேண்டிய பதிகம்.

**சிறப்பு** : திருஞானசம்பந்தர் மதுரை செல்ல இருப்பதைக் கண்ட திருநாவுக்கரசர் நாளும் கோளும் நன்றாக இல்லை எனக் கூறியபோது, சிவனடியாரைக் கோள்கள் ஒன்றும் செய்யாது எனக்கூறி அருளிய பதிகம்.

**வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன் மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி சனிபாம் பிரண்டு முடனே**
**ஆசறுநல்லநல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே.**

வேய் உறு தோளி பங்கன் விடம் உண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசு அறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி சனி பாம்பு இரண்டும் உடனே
ஆசு அறும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.

**விளக்கம் :**

மூங்கில் போன்ற தோளினை உடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டவனும், விடம் உண்ட கண்டனும் ஆகிய சிவபிரான் திங்கள் கங்கை ஆகியவற்றைத்தன் முடிமேல் அணிந்தவனாய் மகிழ்ச்சியுற்ற நிலையில் வீணையை மீட்டிக்கொண்டு என் உளம் புகுந்து தங்கியுள்ளான். அக்காரணத்தால் ஞாயிறு , திங்கள் முதலான ஒன்பான் கோள்களும் குற்றம் அற்ற நலத்தைச் செய்வனவாம். அவை அடியார்களுக்கும் மிகவும் நல்லனவே செய்யும்.

**காப்பு :**

**தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி வளர்செம்பொன் எங்கும் நிகழ**

**நான்முகன் ஆதியாய பிரமா புரத்து மறைஞான ஞான முனிவன்**
**தானுறு கோளுநாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய்**
**ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே**

தேன் அமர் பொழில் கொள் ஆலை விளை செந்நெல் துன்னி வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதி ஆய பிரமாபுரத்து மறைஞானஞானமுனிவன்
தான் உறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாதவண்ணம் உரை செய்
ஆன சொல் மாலை ஓதும் அடியார்கள் வானில் அரசுஆள்வர் ஆணை நமதே

**விளக்கம் :**

பிரம்மபுரம் என்று அழைக்கப்படும் சீர்காழி, தேன் பொருந்திய பொழில்களைக் கொண்டது. கரும்பு, விளைந்த செந்நெல் ஆகியன நிறைந்துள்ளது. வளரும் செம் பொற்குவியல் எங்கும் நிறைந்திருப்பது. நான்முகனால் முதன்முதல் படைக்கப்பட்டது. இத்தகைய பெருமை மிகுபதியில் தோன்றி மறைஞானம் பெற்ற ஞான முனிவன் ஆகிய ஞானசம்பந்தன், வினைப்பயனால் தாமே வந்துறும் கோளும் நாளும் பிறவும் அடியவரை வந்து நலியாத வண்ணம் பாடிய சொல்லான் இயன்ற மாலையாகிய இப்பதிகத்தை ஓதும் அடியவர்கள் வானுலகில் அரசு புரிவர். இது நமது ஆணை.

**வகுப்பு – 6** **பொது பதிகங்கள்**

**திருநாவுக்கரசர்**

திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்,

**திருமுறை** : நான்காம் திருமுறை **பதிகம்** : 009

**தலம் :** பொது

**பண்**: சாதாரி **இராகம்** : பந்துவராளி **தாளம்** : ரூபகம்

**பயன்**: செல்கதிக்கு வழிகாட்டும் பதிகம்

**சிறப்பு**: உடல் உறுப்புகளால் இறைவனை எவ்வாறு வழிபடுவது என்பதை எடுத்துரைக்கும் பதிகம்.

**தலையே நீவணங்காய் – தலைமாலை தலைக்கணிந்து**
**தலையா லேபலி தேருந் தலைவனைத்தலையே நீவணங்காய்.**

தலையே நீ வணங்காய்–தலைமாலை தலைக்கு அணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனை–தலையே நீ வணங்காய்

**விளக்கம் :**

தலைகளால் ஆகிய மாலையைத் தலையில் அணிந்து மண்டையோட்டில் பிச்சை ஏற்று உலாவரும் எம்தலைவனைத் தலையே! நீ வணங்குவாயாக.

**கண்காள் காண்மின்களோ – கடல்நஞ்சுண்ட கண்டன்றன்னை**
**எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்கண்காள் காண்மின்களோ.**

கண்காள் காண் மின்களோ–கடல் நஞ்சு உண்ட கண்டன் தன்னை
எண்தோள் வீசி நின்று ஆடும் பிரான் தன்னை–கண்காள் காண்மின்களோ

**விளக்கம் :**

கண்களே! பாற்கடலில் வந்தஆலகால விடத்தை உண்ட நீலகண்டனாய் எட்டுத் தோள்களையும் வீசிக் கொண்டு நின்ற நிலையில் ஆடும் பெருமானை நீங்கள் காணுங்கள்.

**ஆக்கை யாற்பயனென் – அரன்கோயில் வலம்வந்து**
**பூக்கையா லட்டிப் போற்றியென் னாதஇவ்ஆக்கை யாற்பயனென்**

ஆக்கையால் பயன் என்– அரன் கோயில் வலம்வந்து
பூக் கையால் அட்டி போற்றி என்னாத இவ் ஆக்கையால் பயன் என்

**விளக்கம் :**

இவ்வுடம்பால் விளையக்கூடியப் பயன் யாது? எம் பெருமானுடைய கோயிலை வலமாகச் சுற்றி வந்து பூக்களைக் கையால் சமர்ப்பித்து அவனுக்கு வணக்கம் செய்யாத இவ்வுடம்பினால் யாது பயன்?

**தேடிக் கண்டுகொண்டேன் – திருமாலொடு நான்முகனும்**
**தேடித் தேடொணாத் தேவனை யென்னுளேதேடிக் கண்டுகொண்டேன்**

தேடிக் கண்டு கொண்டேன்–திருமாலொடு நான்முகனும்
தேடித் தேட ஒணாத் தேவனை, என் உளே, தேடிக் கண்டு கொண்டேன்

**விளக்கம் :**

எம்பெருமானைத் தேடிக் கண்டுகொண்டேன். திருமாலும் நான்முகனும் தேடியும் காணமுடியாத தேவனைத் தேடி அவன் என் நெஞ்சத்துள்ளேயே இருக்கின்றான் என்ற செய்தியை அறிந்து அவனைத் தேடிக் கண்டுகொண்டேன்.

**வகுப்பு – 7** **பொது பதிகங்கள்**

**சுந்தரர்**

சுந்தரர் அருளிய தேவாரம்

**திருமுறை** : ஏழாம்திருமுறை **பதிகம் :** 063

**தலம்** : பொது

**பண்** : தக்கேசி **இராகம்** : காம்போதி **தாளம்** : ஆதி

**பயன்**: தான் எனும் ஆணவம் கெட ஓத வேண்டிய பதிகம்.

**சிறப்பு** : இறைவனே யாவற்றிற்க்கும் தலைவன் என சுந்தரர் அவன் பெருமையினைப் பாடிய பதிகம்.

**மெய்யைமுற் றப்பொடிப் பூசியொர் நம்பி**
**வேதம்நான் கும்விரித் தோதியொர் நம்பி**
**கையில்ஓர் வெண்மழு வேந்தியொர் நம்பி**
**கண்ணும் மூன்றுடை யானொரு நம்பி**
**செய்யநம் பிசிறு செஞ்சடை நம்பி**
**திரிபுரந் தீயெழச் செற்றதோர் வில்லால்**
**எய்தநம் பியென்னை ஆளுடை நம்பி**
**எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே**

மெய்யை முற்றப் பொடிப்பூசி ஒர்நம்பி
வேதம் நான்கும் விரித்து ஓதி ஒர்நம்பி
கையில் ஒர்வெண்மழு ஏந்தி ஒர்நம்பி
கண்ணு மூன்றும் உடையாய் ஒருநம்பி
செய்ய நம்பி சிறுசெஞ்சடை நம்பி
திரிபுரம் தீஎழச்செற்றது ஓர்வில்லால்
எய்த நம்பி என்னை ஆள் உடைநம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பிகண்டாயே

**விளக்கம் :**

சுந்தரர் இறைவன் திருநாமத்தினை நம்பி(தலைவன்) எனக்கூறி இப்பதிகம் முழுவதையும் பாடியுள்ளார். திருமேனி முழுதும் திருநீற்றைப் பூசியுள்ள ஒப்பற்ற நம்பியே, வேதங்கள் நான்கையும் விரித்துப் பாடிய ஒப்பற்ற நம்பியே, கையில் ஒரு வெள்ளிய மழுவை ஏந்திய ஒப்பற்ற நம்பியே, கண்கள் மூன்றை உடையவனாகிய நம்பியே, செம்மை நிறம் உடைய நம்பியே, சிவந்த சடையை யுடைய நம்பியே, முப்புரங்களை, "நெருப்பு எழுமாறு" வளைக்கப்பட்டதொரு வில்லால் எய்த நம்பியே, என்னை ஆளாக உடைய நம்பியே, நீயே எங்களுக்கு எத்தனை பிறவி எடுத்தாலும் தலைவன்.

**ஒன்பதாவதுபாடல்**

**காண்டுநம் பிகழற் சேவடி என்றுங்**
**கலந்துனைக் காதலித் தாட்செய்கிற் பாரை**
**ஆண்டுநம் பிஅவர் முன்கதி சேர**
**அருளும்நம் பிகுரு மாப்பிறை பாம்பைத்**
**தீண்டுநம் பிசென்னி யிற்கன்னி தங்கத்**
**திருத்துநம் பிபொய்ச் சமண்பொரு ளாகி**
**ஈண்டுநம் பிஇமை யோர்தொழு நம்பி**
**எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே**

காண்டும் நம்பி கழல்சேவடி என்றும்
கலந்து உனைக் காதலித்து ஆட்செய்கிற் பாரை
ஆண்டு நம்பி அவர்முன் கதிசேர
அருளும் நம்பி குருமாப் பிறைபாம்பைத்
தீண்டும் நம்பி சென்னியில் கன்னிதங்கத்
திருத்தும்நம்பி பொய்ச்சமண்பொருள்ஆகி
ஈண்டும் நம்பி இமையோர்தொழும் நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே .

**விளக்கம் :**

நம்பியாகிய உனது கழல் அணிந்த திருவடியைக் காண்போம் என்னும் உறுதியோடு மனம்பற்றி உன்னை விரும்பி உனக்கு ஆட்செய்கின்றவரை, நீ ஆட்கொண்டு அவர் விரைந்து உயர்கதி அடையுமாறு அருள்செய்கின்ற நம்பி. ஒளியையுடைய சிறந்த பிறை, பாம்பைப் பொருந்துகின்ற முடியில், கங்கை என்னும் நங்கை தங்கும்படி இனிது வைத்துள்ள நம்பி, சமணர்க்குப் பொய்ப்பொருளாய் மறைந்து நின்று எங்கட்கு மெய்ப்பொருளாய் வெளி நிற்கின்ற நம்பியே, தேவர்கள் வணங்குகின்ற நம்பியே, நீயே எங்களுக்கு எத்தனை பிறவி எடுத்தாலும் தலைவன்.

**வகுப்பு – 8 அற்புத பதிகங்கள் – I**

**திருஞானசம்பந்தர்**

**அருளியவர்** : திருஞானசம்பந்தர்

**திருமுறை** : இரண்டாம் திருமுறை **பதிகம்** : 47

**தலம்** : திருமயிலை கபாலீச்சரம் கோயில்

**பண்** : சீகாமரம் **இராகம்** : மாயமாளவ கௌளை **தாளம்** : ஆதி

**இறைவன் :** கபாலீஸ்வர சுவாமி **இறைவி :** கற்பகவல்லி

**பயன்** : வீடும் ஞானமும் பெற ஓதவேண்டிய பதிகம்

**சிறப்பு** : இறந்து சாம்பலான அங்கம் பூம்பாவை என்ற பெண்ணை உயிர்பிக்க பாடிய பதிகம். இந்த அற்புத நிகழ்வால் இது பூம்பாவைத் திருப்பதிகம் என்று அழைக்கப்படுகிறது.

**மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்**
**கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு**
**கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.**

மட்டுஇட்ட புன்னை அம்கானல் மடமயிலைக்
கட்டுஇட்டம் கொண்டான் கபாலீச்சுரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டுஇட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்

**விளக்கம்:**

பூம்பாவாய்! தேன்பொருந்திய அழகிய புன்னை மரச்சோலைகள் சூழ்ந்ததும், இளமயில்கள் ஆரவாரிப்பதுமான மயிலாப்பூரில் உள்ள கபாலீச்சரம் என்னும் கோயிலில் விருப்பத்தோடு அமர்ந்தவன் மீது நெருக்கமான அன்புடைய இறைவனின் சிவகணத்தார்க்குத் திருவிழாக்காலங்களில் அன்பர்கள் அமுது செய்விக்கும் காட்சிகளைக் காணாது செல்வது முறையோ?

**காப்பு**

**கானமர் சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்**
**தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்**
**ஞானசம் பந்த னலம்புகழ்ந்த பத்தும்வல்லார்**
**வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே.**

கான்அமர்சோலைக் கபாலீச்சுரம் அமர்ந்தான்
தேன்அமர் பூம்பாவைப் பாட்டுஆகச் செந்தமிழான்
ஞானசம்பந்தன் நலம் புகழ்ந்த பத்தும் வல்லார்,
வான சம்பந்தத்தவரோடும் வாழ்வாரே.

**விளக்கம் :**

மணம் பொருந்திய சோலைகள் சூழ்ந்த மயிலையில் விளங்கும் கபாலீச்சரம் என்னும் கோயிலில் எழுந்தருளிய இறைவன் மீது, தேன் பொருந்திய பூவில் உறையும் பாவையை விளிக்கும் பாட்டாகச் செந்தமிழால் ஞானசம்பந்தன் இறைவனது நலம் புகழ்ந்து பாடிய இப்பத்துப் பாடல்களையும் ஓதவல்லவர் வீடுபேறு பெற்று சிவகணத்தவரோடு கூடி நிலைத்து வாழ்வர்.

**திருநாவுக்கரசர்**

**அருளியவர்** : திருநாவுக்கரசர்
**திருமுறை** : நான்காம் திருமுறை **பதிகம் :** 018
**தலம் :** பொது
**பண்** : இந்தளம் **இராகம்**: மாயா மாளவ கௌளை **தாளம்** : ஆதி
**பயன்** : பூச்சிக்கடி மற்றும் விடக்கிருமிகளின் விடத்திலிருந்து விடுபட ஓத வேண்டிய பதிகம்.
**சிறப்பு** : அப்பூதிஅடிகளின் மகன் பாம்பு தீண்டி இறக்க அவனை அப்பர் இப்பதிகம் பாடி உயிர்ப்பித்தார்.

**ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை**
**ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்**
**ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது**
**ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே.**

ஒன்றுகொல் ஆம் அவர் சிந்தை உயர்வரை
ஒன்றுகொல் ஆம் உயரும் மதி சூடுவர்
ஒன்றுகொல் ஆம் இடுவெண்தலை கையது
ஒன்றுகொல் ஆம்அவர் ஊர்வது தானே.

**விளக்கம்:**

எம்பெருமானுடைய உள்ளத்தைப்போல உயர்ந்த கயிலை மலையும், அவர் சூடும் உயர்ந்த பிறையும் அவர் பிச்சை எடுக்குமாறு கையில் ஏந்திய மண்டையோடும், அவர் ஊர்ந்து வரும் காளையும் எண்ணிக்கையில் ஒன்று ஒன்றே மட்டும் தான். "இறைவன் ஒருவனே" என்ற தத்துவத்தை இப்பாடலில் விளக்குகின்றார்.

**கடைசிபத்து :**

**பத்துக்கொ லாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்**
**பத்துக்கொ லாமெயி றுந்நெரிந் துக்கன**
**பத்துக்கொ லாமவர் காயப்பட் டான்றலை**
**பத்துக்கொ லாமடி யார்செய்கை தானே.**

பத்துக்கொல் ஆம் அவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொல் ஆம்எயிறு(ந்) நெரிந்து உக்கன
பத்துக்கொல் ஆம் அவர் காயப்பட்டான் தலை
பத்துக்கொல் ஆம் அடியார் செய்கை தானே.

**விளக்கம் :**

அவர் அணிந்த ஐந்தலைப் பாம்பின் கண்களும் உயிரைப் போக்கும் பற்களும் பத்து. அவரால் கோபிக்கப்பட்ட இராவணனுடைய தலைகளும் பத்து. அவர் அழுத்தியதால் நொறுங்கிய அவன் பற்களும் பத்து. அப்பெருமானுடைய அடியார்களுடைய தசகாரியம் என்னும் செயல்களும் பத்து ஆகும். இறைவனை அடைய உயிர்கள் மேற்கொள்ளவேண்டிய வழிகள் பத்து என்று இப்பாடல் மூலம் நமக்கு வழிகாட்டுகின்றார்.

**வகுப்பு – 10** **அற்புத பதிகங்கள் – I**

**சுந்தரர்**

**அருளியவர்** : சுந்தரர்
**திருமுறை** : ஏழாம்திருமுறை **பதிகம் :** 25
**தலம்** : திருமுதுகுன்றம்
**பண்** : நட்டராகம் **இராகம்** : பந்துவராளி **தாளம்** : ரூபகம்
**இறைவன் :** விருத்தகிரீஸ்வரர் **இறைவி :** விருத்தாம்பிகை
**பயன்** : தான் எனும் ஆணவம் கெட ஓத வேண்டிய பதிகம்.
**சிறப்பு** : திருமுதுகுன்றப் பெருமானை வேண்டி திருஆரூரில் கமலாலய திருக்குளத்தில் ஆற்றில் இட்டப் பொன்னை குளத்தில் எடுத்த போது அருளிய திருப்பதிகம்.

**பொன்செய்த மேனியினீர் புலித்தோலை அரைக்கசைத்தீர்**
**முன்செய்த மூவெயிலும் மெரித்தீர்முது குன்றமர்ந்தீர்**
**மின்செய்த நுண்ணிடையாள் பரவையிவள் தன்முகப்பே**
**என்செய்த வாறடிகேள் அடியேன்இட் டளங்கெடவே.**

பொன் செய்த மேனியினீர் புலித்தோலை அரைக்கு அசைத்தீர்
முன் செய்த மூ எயிலும்(ம்) எரித்தீர் முதுகுன்று அமர்ந்தீர்
மின் செய்த நுண் இடையாள் பரவை இவள் தன் முகப்பே
என் செய்த ஆறு அடிகேள் அடியேன் இட்டளம் கெடவே

**விளக்கம் :**

பொன்னைப்போலும் திருமேனியை உடையவரே, புலியினது தோலை அரையில் உடுத்தவரே, நன்கு செய்யப்பட்ட மூன்று மதில்களையும் முன்பு எரித்தவரே, (மூன்று புரம் – பொன்மதில், வெள்ளி மதில், இருப்பு மதில்) திருமுதுகுன்றத்தில் விரும்பி இருப்பவரே, அடிகளே, மின்னல் போலும் நுண்ணிய இடையையுடையவளும், பரவை என்னும் பெயரினளுமாகிய இவள் முன்னே, அடியேனது துன்பங் கெடுதற்கு நீவிர் என் செய்தவாறு !

**கடைசிபத்து :**

**பிறையா ருஞ்சடையெம் பெருமானரு ளாயென்று**
**முறையால் வந்தமரர் வணங்கும்முது குன்றர்தம்மை**
**மறையார் தங்குரிசில் வயல்நாவலா ரூரன்சொன்ன**
**இறையார் பாடல்வல்லார்க் கெளிதாஞ்சிவ லோகமதே.**

பிறைஆரும் சடைஎம் பெருமான் அருளாய் என்று
முறையால் வந்து அமரர் வணங்கும் முதுகுன்றர் தம்மை
மறையார் தங்குரிசில் வயல் நாவல் ஆரூரன் சொன்ன
இறையார் பாடல் வல்லார்க்கு எளிதாம் சிவலோகமதே

**விளக்கம் :**

தேவர்கள் பலரும் தம் வரிசைக்கேற்ப முறையாக வந்து வணங்கும் திருமுதுகுன்றரை, அந்தணர் தலைவனும், வயல்களையுடைய திருநாவலூரினனும் ஆகிய நம்பியாரூரன், "பிறை பொருந்திய சடையினையுடைய எம்பெருமானே அருள்புரியாய்" என்று வேண்டிப் பாடிய இறைவனது திருவருள் நிறைந்த இப் பாடல்களை நன்கு பாட வல்லவர்க்குச் சிவலோகம் வீடுபேறு எளிதில் கிடைத்துவிடும்.

**வகுப்பு – 11**

**மீள்பயிற்சி வகுப்பு**

இதுவரை கற்றுக்கொண்ட பதிகங்களை மீண்டும் மீள்பயிற்சி செய்தல்.

## திருஞானசம்பந்தர்

**அருளியவர்** : திருஞானசம்பந்தர்
**திருமுறை** : இரண்டாம் திருமுறை **பதிகம் :** 18
**தலம்** : திருமருகல்
**பண்** : இந்தளம் **இராகம்** : மாயாமாளவகௌளை **தாளம்** : ஆதி
**இறைவன் :** இரத்தினகிரீசுவரர் **இறைவி :** வண்டுவார்குழலி
**பயன்** : "சடையா யெனுமால்" என்ற பதிகத்தை ஓத, தடைப்பட்ட திருமணம் கூட கைகூடும். விரைவில் திருமணம் தடையின்றி நடக்க ஓத வேண்டிய பதிகம்.
**சிறப்பு** : விடந்தீர்த்த திருப்பதிகம் – விடந்தீண்டி இறந்த, தான் மணக்க இருக்கும் மணாளனை எண்ணிப் புலம்பிய நங்கையின் குரல்கேட்டுவந்து, அவளுடைய துயரைக் கண்டு, இறைவனை வேண்டி இத்திருப்பதிகம் அருளி இறந்தவனை உயிர் பெறச் செய்த திருஞானசம்பந்தர், இருவருக்கும் திருமணம் நிகழ்த்திய பதி.

**சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்**
**விடையா யெனுமால்வெருவா விழுமால்**
**மடையார் குவளை மலரும் மருகல்**
**உடையாய் தகுமோ இவள்உண் மெலிவே.**

சடையாய் எனுமால் "சரண் நீ" எனுமால்
"விடையாய்" எனுமால் வெருவா விழுமால்
மடை ஆர் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள் மெலிவே?

**விளக்கம் :**

நீர்நிலைகளில் குவளை மலர்கள் மலர்ந்து மணம் செய்யும் திருமருகலைத் தனக்குரிய ஊராக உடைய பெருமானே! இப்பெண், சடையாய் என்றும் விடையாய் என்றும் நீயே எனக்குப் புகலிடம் என்றும் கூறி அஞ்சி மயங்கிவிழுகின்றாள். உன்னையே நினைந்து புலம்பும் இவள் மனவருத்தத்தைப் போக்காதிருத்தல் உன் பெருமைக்கு அழகாகுமா? இவள் துயரை விரைந்து தீர்க்க வேண்டும் என்று வேண்டுகிறார்.

**காப்பு :**

**வயஞா னம்வல்லார் மருகற் பெருமான்**
**உயர்ஞா னமுணர்ந் தடியுள் குதலால்**
**இயன்ஞா னசம்பந் தனபா டல்வல்லார்**
**வியன்ஞா லமெல்லாம் விளங்கும் புகழே.**

வயஞானம் வல்லார் மருகல் பெருமான்
உயர் ஞானம் உணர்ந்து, அடி உள்குதலால்,
இயல் ஞானசம்பந்தன பாடல் வல்லார்,
வியன்ஞாலம் எல்லாம் விளங்கும், புகழே.

**விளக்கம் :**

தன்மயமாக்கும் திருவருள் ஞானம் பெற்றார்(அருள்வயமான நல்லோர்) வாழும் மருகற் பெருமான் திருவடிகளை, உயர்ஞானம் உணர்ந்து நினைதலால் பதி இயல்புற்ற ஞானசம்பந்தன் அருளிய இப்பதிகப் பாடல்களைப் பாடவல்லார் புகழ் அகன்ற இவ்வுலக மெல்லாம் விளங்கித்தோன்றும்.

**வகுப்பு – 13** **அற்புத பதிகங்கள் – II**

**திருநாவுக்கரசர்**

**அருளியவர்** : திருநாவுக்கரசர்
**திருமுறை** : நான்காம் திருமுறை **பதிகம் :** 11
**தலம்** : பொது நமச்சிவாய திருப்பதிகம்
**பண்** : காந்தாரபஞ்சமம் **இராகம்**: கேதார கௌளை **தாளம்**: ஆதி
**பயன்**: பகைவர் இன்னல்களில் இருந்து நீங்க ஓத வேண்டிய பதிகம்.
**சிறப்பு** : நமச்சிவாய திருப்பதிகம் – திருநாவுக்கரசைக் கல்லில் கட்டி கடலில் மூழ்கடிக்க முயன்ற போது நமச்சிவாய நாமத்தின் பெருமையினைப் பாடி கரை சேர்ந்த பதிகம்.

**சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமச்சி வாயவே!**

சொல் துணை வேதியன் சோதிவானவன்
பொன்துணைத் திருந்துஅடி பொருந்தக் கைதொழ
கல் துணைப் பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும்
நல்துணை ஆவது நமச்சிவாயவே

**விளக்கம் :**

வேதத்திற்கு சொல்லாகவும், அழியா பெரும் ஒளியாகவும் உள்ள எம்பெருமானை உள்ளம் உருகி கைகளால் கூப்பித் தொழுவதால் கல்லில் கட்டி கடலில் விட்டாலும் நமக்குத் துணையாக நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரம் இருக்கும். எனவே அதனை என்றும் துதிப்போமாக.

**இல்லக விளக்கது இருள் கெடுப்பது**
**சொல்லக விளக்கது சோதி யுள்ளது**
**பல்லக விளக்கது பலரும் காண்பது**
**நல்லக விளக்கது நமச்சி வாயவே!**

இல்அகவிளக்கு அது இருள் கெடுப்பது
சொல்அக விளக்கு அதுசோதி உள்ளது
பல்அகவிளக்கு அது பலரும் காண்பது
நல்அகவிளக்கு அது நமச்சிவாயவே

**விளக்கம் :**

வீட்டில் உள்ள இருளைப் போக்கும் விளக்காய் விளங்குவதும், சொல்லின் அகத்து நின்று ஒளியாய் விளக்குவதும், பல்வேறு இடத்திலும் பல்வேறு சமயத்தாரும் அறிய நிற்பதும், ஞானம் நிறைந்த உள்ளத்திற்கு நல்விளக்காய் விளங்குவதும் திருவைந்தெழுத்து மந்திரமே. ஐந்தெத்தே நமக்கு காப்பு.

**மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்**
**பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ**
**நாப்பிணை தழுவிய நமச்சிவாயப்பத்து**
**ஏத்தவல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே....**

மாப்பிணை தழுவிய மாதுஒர் பாகத்தன்
பூப்பிணை திருந்துஅடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவாயப்பத்து
ஏத்தவல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே.

**விளக்கம் :**

மான்குட்டியைக் கையிலேந்திய, பார்வதி தேவியினைத் தனது இடபாகத்தில் கொண்ட மாதோர் பாகத்தான்,அவனுடைய பூமாலைகள் சார்த்தப் பெற்ற திருவடிகளை உள்ளம் பொருந்தி கைதொழுவதற்கு, நம் நாவிற்கு உறுதுணையாக இருக்கும்

திருவைந்தெழுத்தைப் பற்றிய இப்பத்துப் பாடல்களைப் போற்றி பாடவல்ல அடியவர்களுக்கு எத்தகைய துயரங்களும்  துன்பங்களும் ஏற்படாது.

**வகுப்பு – 14** **அற்புத பதிகங்கள் – II**

**சுந்தரர்**

**அருளியவர்** : சுந்தரர்
**திருமுறை** : ஏழாம்திருமுறை **பதிகம் : 92**
**தலம்** : திருப்புக்கொளியூர் அவினாசி
**பண்**: குறிஞ்சி **இராகம்**: அரிகாம்போதி **தாளம்** : திஸ்ர திரிபுடை
**இறைவன் :** அவிநாசிநாதர் **இறைவி :** கருணாம்பிகை
**பயன்** : பிள்ளைகளுக்கு உற்ற இடர்பாடு நீங்க ஓத வேண்டிய திருப்பதிகம்.
**சிறப்பு** : முதலையுண்ட பாலகனை வரவழைக்க அருளிய திருப்பதிகம்.

**எற்றான் மறக்கேன் எழுமைக்கும்எம்பெரு மானையே**
**உற்றாய்என் றுன்னையே உள்குகின்றேன்உணர்ந் துள்ளத்தால்**
**புற்றா டரவா புக்கொளியூர்அவி னாசியே**
**பற்றாக வாழ்வேன் பசுபதியேபர மேட்டியே** 7.92.1

எற்றால் மறக்கேன், எழுமைக்கும் எம்பெருமானையே
"உற்றாய்" என்று உன்னையே உள்குகின்றேன் உணர்ந்து உள்ளத்தால்
புற்று ஆடுஅரவா புக்கொளியூர் அவிநாசியே
பற்று ஆக வாழ்வேன் பசுபதியே பரமேட்டியே

**விளக்கம் :**

புற்றில் வாழும் படமெடுத்து ஆடுகின்ற பாம்பை அணிந்தவனே, உயிர்களுக்கெல்லாம் தலைவனே, மேலான பரம்பொருளாக உள்ளவனே, திருப்புக்கொளியூரில் உள்ள, அவினாசி என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, ஏழு பிறப்பிலும் எமக்குத் தலைவனாய் உள்ள உன்னையே எனக்கு உறவினன் என்று உணர்ந்து என்றும் மனத்தால் நினைக்கின்றேன். உன்னையே எனது பற்றுக் கோடாகக் கொண்டு வாழ்வேன். அப்படிப்பட்ட நான் உன்னை எக்காரணத்தால் மறப்பேன்.

**உரைப்பார் உரைஉகந் துள்கவல் லார்தங்கள் உச்சியாய்**
**அரைக்கா டரவா ஆதியும்அந்தமும் ஆயினாய்**

**புரைக்காடு சோலைப் புக்கொளியூர்அவி னாசியே**
**கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச்சொல்லு காலனையே** 7.92.4

உரைப்பார் உரை உகந்து உள்க வல்லார்தங்கள் உச்சியாய்
அரைக்காடு அரவா ஆதியும்அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளியூர் அவினாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே

**விளக்கம் :**
உன்னைப் புகழ்கின்றவர்களது சொல்லை விரும்புபவனே , உன்னை எஞ்ஞான்றும் மறவாது நினைக்க வல்லவரது தலைமேல் இருப்பவனே , அரையின்கண் ஆடுகின்ற பாம்பைக் கட்டியுள்ளவனே , எல்லாப் பொருட்கும் முதலும் முடிவும் ஆனவனே , சிறந்த முல்லை நிலத்தையும் , சோலைகளையும் உடைய திருப்புக்கொளியூரில் உள்ள , "அவினாசி" என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவனே , கூற்றுவனையும் முதலையையும் , இக்குளக் கரைக்கண் பிள்ளையைக் கொணர்ந்து தருமாறு ஆணையிட்டருள் .

**நீரேற ஏறு நிமிர்புன்சடைநின்மல மூர்த்தியைப்**
**போரேற தேறியைப் புக்கொளியூர்அவி னாசியைக்**
**காரேறு கண்டனைத் தொண்டன்ஆரூரன் கருதிய**
**சீரேறு பாடல்கள் செப்பவல்லார்க்கில்லை துன்பமே** 7.92.10

நீர்ஏற ஏறும் நிமிர் புன்சடை நின்மல மூர்த்தியை
போர்ஏறு அதுஏறியை புக்கொளியூர்அவிநாசியை
கார்ஏறு கண்டனை தொண்டன்ஆரூரன் கருதிய
சீர்ஏறு பாடல்கள் செப்பவல்லார்க்கு இல்லை துன்பமே

**விளக்கம் :**

நீர் தங்குதலால் பருமை, பெற்ற, நீண்ட புல்லிய சடையை உடைய, தூய பொருளானவனும், போர் செய்யும் எருதை ஏறுபவனும், கருமை பொருந்திய கண்டத்தையுடையவனும் ஆகிய, திருப்புக்கொளியூரிலுள்ள அவினாசி என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானை, அவனது தொண்டனாகிய நம்பியாரூரன், ஒரு பயன் கருதிப் பாடிய இப்புகழ்மிக்க பாடல்களைப் பாடவல்லவர்கட்குத் துன்பம் இல்லையாகும்.

**வகுப்பு – 15 சிறப்பு பதிகங்கள் I**

**திருஞானசம்பந்தர்**

**அருளியவர்** : திருஞானசம்பந்தர்
**திருமுறை** : மூன்றாம் திருமுறை **பதிகம் :** 24
**தலம்** : திருக்கழுமலம் (சீர்காழி)
**பண்** : கொல்லி **இராகம்** : நவரோஸ் **தாளம்** : மிஸ்ரசாபு
**இறைவன்** : தோணியப்பர் **இறைவி** : திருநிலைநாயகி
**பயன்** : மங்கல நிகழ்ச்சிகளில் ஓத வேண்டிய பதிகம்.
**சிறப்பு** : இறைவன் அருளை வியந்து போற்றிப் பாடிய பதிகம்.

**மண்ணின் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணின் நல்ல கதிக்கி யாதுமோர் குறைவிலைக்**
**கண்ணின்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்**
**பெண்ணின்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.**

மண்ணின் நல்லவண்ணம் வாழல்ஆம் வைகலும்
எண்ணின் நல்லகதிக்கு யாதும்ஓர் குறைவுஇலை
கண்ணின் நல்ல(ஃ)து உறும் கழுமல வளநகர்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

**விளக்கம் :**

உயிர்கள் இப்பூவுலகில் வளமோடு இன்ப வாழ்வு வாழலாம். தினந்தோறும் இறைவனை நினைத்து வழிபட்டு யாதொரு குறையுமிலாத முக்தியின்பமும் பெறலாம். இத்தகைய பேற்றினை அளிக்கும் பொருட்டே கண்ணுக்கினிய நல்ல வளத்தையுடைய கழுமலம் (சீர்காழி) என்னும் ஊரில் பெண்ணின் நல்லாளாகிய உமாதேவியோடு பெருந்தகையாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான்.

**காப்பு :**

**கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்**
**பெருந்தடங் கொங்கையோ டிருந்தஎம் பிரான்றனை**
**அருந்தமிழ் ஞானசம்பந்தன செந்தமிழ்**
**விரும்புவார் அவர்கள்போய் விண்ணுலகாள்வரே.**

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையொடு இருந்த எம்பிரான்தனை
அருந்தமிழ் ஞானசம்பந்தன செந்தமிழ்
விரும்புவார் அவர்கள் போய் விண்ணுலகு ஆள்வரே

**விளக்கம் :**

நீர்வளமும், தேன்வளமும் பெருகிய திருக்கழுமல வளநகரில், மேல் நோக்கி வளைந்த பெரிய கொங்கைகளையுடைய உமாதேவியோடு வீற்றிருந்தருளும் எங்கள் தலைவனான சிவ பெருமானை, அருந்தமிழ் வல்லவனான ஞானசம்பந்தன் செழுந்தமிழில் அருளிய இத்திருப்பதிகத்தை விரும்பி ஓத வல்லவர்கள் விண்ணுலகை ஆள்வர்.

## திருநாவுக்கரசர்

**அருளியவர்** : திருநாவுக்கரசர்

**திருமுறை** : ஐந்தாம் திருமுறை **பதிகம் :** 90

**தலம்** : பொது

**பண் :** தனித்திருக்குறுந்தொகை **இராகம்** : மாயமாளவ கௌளை **தாளம்** : ஆதி

**பயன்** : உலக வாழ்வில் தொல்லை நீங்கி இறைவன் அருளைப் பெற ஓத வேண்டிய பதிகம்.

**சிறப்பு** : தனித் திருக்குறுந்தொகை, திருநாவுக்கரசரை சுண்ணாம்பு அறையில் (நீற்றறை) அடைத்து வைத்த போது அவர் இறைவன் அருளை வியந்து பாடிய பதிகம்.

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே**....

மாசுஇல் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கு இளவேனிலும்
மூசுவண்டு அறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணை அடிநீழலே

**விளக்கம் :**

இறைவனாகிய எம் தந்தையின் திருவடி நிழல், குற்றமற்ற வீணையின் நாதத்தைப் போலவும், மாலையிலே தோன்றிய நிலவின் தண்மை போலவும், வீசுகின்ற தென்றலின் இன்பத்தைப் போலவும், செறிந்த இளவேனிலின் குளிர்ச்சி போலவும், ஒலிக்கும் வண்டுகள் மொய்க்கும் பூக்களுடைய பொய்கையினைப் போன்றும் இன்பம் பயப்பதாகும். இதைவிட பெரிய பேறு எதுவும் இல்லை.

**நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்**
**நமச்சி வாயவே நானறி விச்சையும்**
**நமச்சி வாயவே நாநவின் றேத்துமே**
**நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.**

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நான்அறிவிச்சையும்
நமச்சிவாயவே நாநவின்று ஏத்துமே
நமச்சிவாயவே நன்நெறி காட்டுமே

**விளக்கம் :**

ஞானமும் , கல்வியும் , நானறிந்த வித்தையும் பஞ்சாட்சரமே ; நா கூறி வழிபடுவதும் அதனையே ; நன்னெறி காட்டுவதும் அத்திருமந்திரமேயாகும் .

**கடைசி பத்து :**

**விறகில் தீயினன் பாலில்படு நெய்போல்**
**மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்**
**உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினான்**
**முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே.**

விறகில் தீயினன் பாலில்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச்சோதியான்
உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக்கடைய முன்நிற்குமே

**விளக்கம் :**

விறகில் மறைந்துள்ள தீப்போலவும், பாலில் மறைந்திருக்கும் நெய்போலவும், மாமணிச் சோதியனாகிய இறைவன் எல்லாப் பொருளிலும் கருப்பொருளாக நின்றுள்ளான். அவனை உறவு என்னுங்கோலை நட்டு உணர்வு என்ற கயிற்றினால் இறுகப்பற்றி கடைந்தால் நம்முள் மறைந்திருக்கும் அவன் நமக்கு முன் வந்து அருள் வழங்குவான்.

**வகுப்பு – 17 சிறப்பு பதிகங்கள் I**

**சுந்தரர்**

**அருளியவர்** : சுந்தரர்

**திருமுறை** : ஏழாம்திருமுறை **பதிகம் :** 59

**தலம்** : திருவாரூர்

**பண்**: தக்கேசி **இராகம்**: காம்போதி **தாளம்** : ஆதி

**இறைவன் :** வன்மீகநாதர் **இறைவி :** கமலாம்பிகை

**பயன்** : உலக இன்பங்களைத் துய்க்க இறைவன் அருள்வேண்டி ஓதவேண்டிய பதிகம்.

**சிறப்பு** : திருவாவூர் எம்பெருமான் பெருமையினை வியந்துப் பாடிய பதிகம்.

**பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்போக மும்திரு வும்புணர்ப் பானைப்**
**பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை**
**இன்ன தன்மையன் என்றறி வொண்ணாஎம்மா னைஎளி வந்தபி ரானை**
**அன்னம்வை கும்வ யற்பழ னத்தணிஆரூ ரானை மறக்கலு மாமே**

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை போகமும் திருவும் புணர்ப்பானை
பின்னை என்பிழையைப் பொறுப்பானை பிழைஎலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்று அறிவு ஒண்ணா எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயல் பழனத்து அணி ஆரூரானை மறக்கலும் ஆமே

**விளக்கம் :**

எனக்குப் பொன்னையும், மெய்யுணர்வையும், வழங்குபவனும், அவை வாயிலாக உலகின்பத்தையும், வீடுபேறு இன்பத்தையும் சேர்ப்பிக்கின்றவனும், அதன்பின் நான் அவ்வின்பங்களை நுகரும்பொழுது செய்கின்ற பிழைகளைப் பொறுத்துக்கொள்பவனும், பின்னர்ப் பிழைகளே வாராதவாறு அருள் செய்பவனும், இன்ன தன்மையை உடையவன் என்று வரையறுத்து உணர ஒண்ணாத எங்கள் தலைவனும், எனக்கு எளிவந்த பெருமானும் ஆகிய, அன்னங்கள் தங்கியுள்ள வயல்களையுடைய பண்ணைகளின் நடுவில் விளங்கும் அழகிய திருவாரூர் இறைவனை யான் மறத்தலும் இயலுமோ !

**ஓரூர் என்றுல கங்களுக் கெல்லாம்உரைக்க லாம்பொரு ளாய்உடன் கூடிக்**
**காரூ ருங்கமழ் கொன்றைநன் மாலைமுடியன் காரிகை காரண மாக**
**ஆரூ ரைம்மறத் தற்கரி யானைஅம்மான் றன்திருப் பேர்கொண்ட தொண்டன்**
**ஆரூ ரன்னடி நாயுரை வல்லார்அமர லோகத் திருப்பவர் தாமே**

ஓர்ஊர் என்று உலகங்களுக்கு எல்லாம் உரைக்கல் ஆம்பொருள்ஆய் உடன்கூடி
கார்ஊரும் கமழ்கொன்றை நல்மாலைமுடியன் காரிகை காரணம்ஆக
ஆரூரை(ம்) மறத்தற்குஅரியானை அம்மான்தன் திருப்பேர்கொண்ட தொண்டன்
ஆரூரன்(ன்) அடிநாய் உரைவல்லார் அமரலோகத்து இருப்பவர் தாமே

**விளக்கம் :**

பரவை என்பவள் காரணமாக எல்லா உலகங்கட்கும் தலைமையுடைய ஓர் ஊர் என்று சொல்லத் தக்க ஊராகவும், நான் அவளுடன் கூடி வாழ்ந்து மறத்தற்கு இயலாததாய் அமைந்துவிட்ட திருவாரூர் இறைவனை கார்காலத்தில் பூக்கின்ற மணங்கமழுங் கொன்றை மாலையை அணிந்த முடியையுடையவனாகிய அப்பெருமானது திருப்பெயரைக் கொண்ட அவன் அடிக் கீழ்க் கிடக்கும் நாய் போலும் தொண்டனாகிய நம்பியாரூரன் பாடிய இப்பதிகத்தைப் பாட வல்லவர் அமரலோகத்தில் வாழ்பவராதல் திண்ணம்.

## திருஞானசம்பந்தர்

**அருளியவர்** : திருஞானசம்பந்தர்

**திருமுறை** : மூன்றாம் திருமுறை **பதிகம் : 22**

**தலம்** : பொது

**பண்** : காந்தார பஞ்சமம் **இராகம்** : கேதார கௌளை **தாளம்** : ஆதி

**பயன்** : வாழ்நாள் முழுவதும் எந்தவித குறையும் இன்றி வாழ்வதற்கு ஓத வேண்டிய பதிகம்

**சிறப்பு** : பஞ்சாக்கரத் திருப்பதிகம் – திருஐந்தெழுத்தை வியந்து போற்றிப் பாடிய பதிகம்.

**துஞ்சலும் துஞ்சலி லாத போழ்தினும்**
**நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்**
**வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்**
**றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே.**

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்,
நெஞ்சு அகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உடைத்தன அஞ்சு எழுத்துமே.

**விளக்கம் :**

தூங்கும் பொழுதும், விழித்திருக்கும் பொழுதும், மனம் கசிந்து உருக நாள்தோறும் திருஐந்தெழுத்தை நினைத்துப் போற்றுங்கள். பல வழிகளில் திரிந்து செல்லும் தன்மையுடைய மனத்தை அவ்வாறு செல்லவிடாமல் தடுத்து ஒருமுகப்படுத்தி இறைவனையே நினைத்து அவன் திருவடிகளை வாழ்த்திப் போற்றிய மார்க்கண்டேயரின் உயிரை அவருக்கு விதிக்கப்பட்ட வாழ்நாள் இறுதியில் கவர வந்த கூற்றுவனை உதைத்து அழித்தன திருவைந்தெழுத்தே.

**காப்பு :**

**நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை**
**கற்றவன் காழியர் மன்னன் உன்னிய**
**அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்**
**துற்றன வல்லவர் உம்ப ராவரே.**

நல் தமிழ் ஞானசம்பந்தன் நால்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றம் இல் மாலைஈர் ஐந்தும் அஞ்சு எழுத்து
உற்றன வல்லவர் உம்பர் ஆவரே.

**விளக்கம் :**

நன்னெறி கூட்டுவிக்கும் தமிழ் பரப்பும், ஞானசம்பந்தன், நான்கு வேதங்களையும் கற்று வல்லவனாய்ச் சீகாழி மக்கள் தலைவனாய் மனத்தால் தியானித்துப் பாடிய, கேடுகள் வாராமல் தடுக்கும் திருவைந்தெழுத்தின் பெருமைகளை எடுத்துரைக்கும் இம்மாலையின் பத்துப் பாடல்களையும் ஓதவல்லவர்கள் தேவர்களாவார்கள்.

**வகுப்பு – 19** **சிறப்பு பதிகங்கள் II**

**திருநாவுக்கரசர்**

**அருளியவர்** : திருநாவுக்கரசர்
**திருமுறை** : ஐந்தாம் திருமுறை **பதிகம் : 1**
**தலம்** : திருத்தில்லை (சிதம்பரம்) **பாடல்**
**அமைப்பு** : திருக்குறுந்தொகை **இராகம்**: மாயமாளவ கௌளை **தாளம்** : ஆதி
**இறைவன் :** சபாநாயகர்(நடராஜப்பெருமான்) **இறைவி :** சிவகாமியம்மை
**பயன்** : பிறவிப்பிணி தீர ஓத வேண்டிய பதிகம்.
**சிறப்பு** : தில்லையின் சிறப்பு பற்றி பாடிய பதிகம்.

**அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்**
**பொன்னம் பாலிக்கும் மேலும் இப்பூமிசை**
**என்னம் பாலிக்கும் மாறுகண்டு இன்புற**
**இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே?**

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் இப்பூமிசை
என் நம்பு ஆலிக்கும் ஆறு கண்டு இன்புஉற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே

**விளக்கம் :**

பேரின்பவீடு நல்கும் தில்லைத் திருச்சிற்றம்பலம் பொன்னுலக வாழ்விற்குத் தேவையானவற்றைத் தரும். இத்தகைய திருச்சிற்றம்பலத்தை, மேலும் இந்நிலவுலகில் என் அன்பு பெருகும் வகையில் கண்டு, பரமுத்திப் பேரின்ப நிலையை எளிதின் அடைதற்குத் தேவையான இந்த நல்ல மனிதப் பிறவியை இன்னும் கொடுப்பாயா ?எம் இறைவா!

**மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்**
**சதுரன் சிற்றம்பலவன் திருமலை**
**அதிர ஆர்த்தெடுத்தான்முடி பத்திற**
**மிதிகொள் சேவடி சென்றடைந்துய்ம்மினே.**

மதுர வாய்மொழி மங்கை ஓர் பங்கினன்,

சதுரன் சிற்றம்பலவன் திருமலை
அதிர ஆர்த்து எடுத்தான் முடிபத்து இற
மிதிகொள் சேவடி சென்று அடைந்து உய்ம்மினே

**விளக்கம் :**

இனிய மொழிபேசும் பார்வதி அம்மையை இடப்பாகத்தே வைத்தவன், இளைப்பின்றி உலகெலாம் படைத்துக் காத்து அழிக்கவல்ல சதுரப்பாடுடையவன், திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ளவன், இப் பெருமான் எழுந்தருளியுள்ள திருமலை எனப்படும் திருக்கயிலாய மலையை அசையும்படி, செருக்கினால் ஆரவாரம் செய்து எடுக்க முயன்ற இராவணனுடைய பத்து முடிகளும் வருந்தும்படி மெள்ள ஊன்றும் செம்மையான திருவடியைச் சென்று கை தொழுது இப்பிறவியில் உய்வு பெறுவோம்.

**வகுப்பு – 20** **சிறப்பு பதிகங்கள் II**

**சுந்தரர்**

**அருளியவர்** : சுந்தரர்
**திருமுறை** : ஏழாம்திருமுறை **பதிகம் : 24**
**தலம்** : திருமழபாடி
**பண்** : நட்டராகம் **இராகம்** : பந்துவராளி **தாளம்** : ரூபகம்
**இறைவன் :** வயிரத்தூண்நாதர் **இறைவி :** அழகம்மை
**பயன்** : அன்பும் அருளும் பெற ஓத வேண்டிய பதிகம்.
**சிறப்பு** : மழப்பாடி திருத்தலத்தில் இறைவனை "என்றும் மறவேன்" எனப் பாடிய பதிகம்.

**பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து**
**மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே**
**மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே**
**அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.**

பொன்ஆர் மேனியனே புலித்தோலை அரைக்கு அசைத்து
மின்ஆர்செஞ்சடை மேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னை அல்லால் இனியாரை நினைக்கேனே

**விளக்கம் :**
பொன் போலும் திருமேனியை உடையவனே, இடையில் புலித்தோலை உடுத்து, மின்னல் போல் மின்னுகின்ற நிலவை வைத்துள்ள சடையில் கொன்றை மாலையை அணிந்தவனே, தலைவனே, விலையுயர்ந்த இரத்தினம் போல்பவனே, திருமழபாடியுள் திகழும் மாணிக்கம் போல்பவனே, எனக்குத் தாயாய் விளங்குபவனே, இப்பொழுது உன்னையன்றி யான் வேறு யாரை நினைப்பேன்?

**ஏரார் முப்புரமும் மெரியச்சிலை தொட்டவனை**
**வாரார் கொங்கையுடன் மழபாடியுள் மேயவனைச்**

**சீரார் நாவலர்கோன் ஆரூரன் உரைத்ததமிழ்**
**பாரோர் ஏத்தவல்லார் பரலோகத் திருப்பாரே.**

ஏர்ஆர் முப்புரமும் எரியச் சிலை தொட்டவனை
வார்ஆர் கொங்கை உடன் மழபாடியுள் மேயவனை
சீர்ஆர் நாவலர்கோன் ஆரூரன் உரைத்ததமிழ்
பாரோர் ஏத்த வல்லார் பரலோகத்து இருப்பாரே

**விளக்கம் :**
அழகு பொருந்திய மூன்று புரங்களும் எரிந்தொழியுமாறு வில்லை வளைத்தவனும், கச்சையணிந்ததனங்களையுடையவளாகிய உமாதேவியுடன் திருமழபாடியுள் விரும்பி வீற்றிருப்பவனும் ஆகிய சிவபெருமானை, புகழ் நிறைந்த திருநாவலூரில் உள்ளார்க்குத் தலைவனாகிய நம்பியாரூரன் பாடிய இத்தமிழ்ப் பாடல்களைப் பாட வல்லவர்களாகிய மக்கள், சிவலோகத்தில் இனிது வீற்றிருப்பார்கள்.

**வகுப்பு – 21** **பஞ்ச புராணம் I**

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் புராணம் (பெரிய

புராணம்) ஆகிய ஐந்தில் ஒவ்வொரு பாடலையும் எடுத்துப் பாடுவது தான் 'பஞ்ச புராணம் பாடுதல்' எனப்படுகிறது.

**தேவாரம்**

திருஞானசம்பந்தர் அருளிய இரண்டாம் திருமுறை பதிகம் : 106 **தலம்** : திருவலஞ்சுழி
**பண் :** நட்டராகம் **இராகம்** : பந்துவராளி **தாளம்** : ஆதி

**என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து**
**முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்**
**மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்**
**பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே. 1**

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப்பயன் இடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழிவாணனை வாய்ஆரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே

**விளக்கம் :**
கடல் சூழ்ந்த இவ்வுலகத்து, செய்த நல்வினைப் பயன்களில் , நெஞ்சே ! நீ ! எத்தகைய புண்ணியத்தைச் செய்துள்ளாய்? முழுமையான மணிகளும் , முத்துக்களும் நிறைந்த நிலையான காவிரியாறு சூழ்ந்த திருவலஞ்சுழி இறைவனைப் போற்றியும் , அன்பு செய்தும் , பாடியும் வழிபடும் வாய்ப்பு உனக்கு கிடைத்திருத்தலால். (இறைவனை மனம், வாக்கு, மெய் இவைகளால் வழிபடும் புண்ணியம்.)

**மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை வயற்காழி**
**நாதன் வேதியன் ஞானசம் பந்தன்வாய் நவிற்றிய தமிழ்மாலை**
**ஆத ரித்திசை கற்றுவல் லார்சொலக் கேட்டுகந் தவர்தம்மை**
**வாதி யாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம்வந் தடையாவே. 11**

மாதுஓர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை வயல்காழி
நாதன் வேதியன் ஞானசம்பந்தன் வாய் நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித்து இசைகற்றுவல்லார் சொலக்கேட்டு உகந்தவர் தம்மை
வாதியாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்து அடையாவே

**விளக்கம் :**

மாதொரு பாகனை, திருவலஞ்சுழியில் விளங்கும் பிறவிநோய் தீர்க்கும் மருந்து போல்வானை, காழி ஞானசம்பந்தன் பாடி ஏத்திய இத் திருப்பதிகத்தை அன்போடு இசை கூட்டிப் பாடுவார், அதனைக் கேட்பார் ஆகிய அடியவர்களை வினைகள் சாரா. இம்மையிலும், மறுமையிலும் எப்போதும் வருத்தம் வந்து அவர்களை அணுகா

## திருவாசகம்

மாணிக்கவாசகர் அருளிய எட்டாம்திருமுறை 37 பிடித்தபத்து பாடல் 9 **இராகம் :** மோகனம் **தாளம் :** ஆதி

**பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்பரிந்துநீ பாவியே னுடைய**
**ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கிஉலப்பிலாஆனந்தமாய**
**தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்தசெல்வமே சிவபெருமானே**
**யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்எங்கெழுந் தருளுவதினியே**

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி உலப்பு இலாஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கு
எழுந்தருளுவது
இனியே?

**விளக்கம் :**

பாலை,காலமறிந்து கொடுக்கின்ற தாயைக் காட்டிலும் மிகவும் அன்பு கொண்டு, நீ பாவியாகிய என்னுடைய உடம்பை உருக்கி, உள்ளத்தில் ஞானத்தை பெருக்கி, அழியாத இன்பமாகிய தேனைப் பொழிந்து நான்கு புறங்களிலும் உடன் திரிந்த அருட்செல்வமே! சிவபிரானே! நான் உன்னைத் தொடர்ந்து உறுதி யாகப் பற்றியுள்ளேன். நீ இனிமேல் எங்கே எழுந்தருளிச் செல்வது?.

## திருவிசைப்பா

சேந்தனார் அருளிய ஒன்பதாம் திருமுறை பதிகம் : 005 பாடல் **2** **தலம் :** திருவீழிமிழலை
**இராகம்** : ஆனந்தபைரவி **தாளம்** : ஆதி

**கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்**
**கரையிலாக் கருணைமா கடலை**
**மற்றவர் அறியா மாணிக்க மலையை**
**மதிப்பவர் மனமணி விளக்கைச்**
**செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்**
**திருவீழி மிழலைவீற் றிருந்த**
**கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்**
**குளிரஎன் கண்குளிர்ந் தனவே**

**விளக்கம் :**

கற்றவர்களால் அக்கல்வியின் பயனாக அடைந்து அநுபவிக்கப்படும் தெய்வீக மரத்தில் பழுத்தகனி போன்றவனாய், எல்லை இல்லாத பெருங் கருணைக் கடலாய், மற்றவர்கள் தம் முயற்சியில் அறியமுடியாத செந்நிற மாணிக்கமணியால் ஆகிய மலை போன்றவனாய், தன்னை வழிபடும் அடியவருடைய உள்ளத்தில் மாணிக்கச்சுடர் போன்ற ஞான ஒளி வீசுபவனாய், பகைவர்களுடைய முப்புரங்களையும் அழித்த, எங்களுக்கு நன்மையைத் தருபவனாய், அடியார்களுக்கு அருளுவதற்காகவே திருவீழிமிழலையில் வீற்றிருக்கும் தலைவனாகிய சிவபெருமானைப் பலகாலும் தரிசித்ததனால் என் உள்ளம் குளிர என் கண்களும் குளிர்ச்சி பெற்றன.

**வகுப்பு – 22 பஞ்சபுராணம் I**

**திருப்பல்லாண்டு**

சேந்தனார் அருளிய ஒன்பதாம் திருமுறை பதிகம் : 029 பாடல் 1 **தலம் :** கோயில்
**பண்** : பஞ்சமம் **இராகம்** : ஆஹிரி **தாளம்** : ஆதி

**மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்**

**வஞ்சகர் போயகலப்**
**பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து**
**புவனியெல் லாம்விளங்க**
**அன்ன நடைமட வாள்உமை கோன்அடி**
**யோமுக் கருள்புரிந்து**
**பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்**
**பல்லாண்டு கூறுதுமே**

**விளக்கம் :**

தில்லைத்திருநகரம் என்றும் நிலைபெறுக; நம் அடியார்கள் பல்லாண்டு வாழ்க; அடிமை செய்ய ஒருப்படாதவர்கள் இல்லாதொழிய, பொன்மயமான மண்டபத்திலே நுழைந்து உலக மெல்லாம் நிலைபெறுமாறு நின்று, அன்னம் போன்ற நடையினை உடைய இளையள் ஆகிய உமாதேவியின் தலைவன், அடியவர்களாகிய நமக்கு அருள் பாலித்து இனிவரும் பிறவியை நாம் அறுத்துக் கொள்ளும்படி அடியேமுக்குத் தன் திருக்கூத்தாகிய அருளைப் பொழிந்து திருவடி ஞானத்தை அருளியுள்ளான். அந்தப்பித்தனை நாம் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோமாக

**பெரியபுராணம்**

சேக்கிழார் அருளிய பன்னிரண்டாம் திருமுறை
28 திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம்  பாடல் எண் : 659
**இராகம்** : மத்தியமாவதி  **தாளம்** : சுத்தாங்கம் (விருத்தம்) / ஆதி

**சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும்**
**இனிஎதிர் காலத்தின் சிறப்பும்**
**இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால்**

**எற்றைக்குந் திருவருள் உடையேம்**
**நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்**
**நற்றமிழ் வேந்தனும் உய்ந்து**
**வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்**
**மேன்மையும் படைத்தனம் என்பார்**

சென்ற காலத்தின் பழுது இலாத் திறமும்
இனி எதிர் காலத்தின் சிறப்பும்
இன்று எழுந்து அருளப் பெற்ற பேறு இதனால்
எற்றைக்கும் திரு அருள் உடையேம்
நன்றி இல் நெறியில் அழுந்திய நாடும்
நல் தமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றி கொள் திரு நீற்று ஒளியினில்
விளங்கும் மேன்மையும் படைத்தனம் என்பார்

**விளக்கம் :**

சென்ற காலத்தில் பழுது இன்றி நின்ற இயல்பும், எதிர்காலத்தில் வரும் சிறப்புடைய திறமும், இன்று இங்குத் தாங்கள் எழுந்தருளப் பெற்றதால் விளங்கும். இதனால் முக்காலத்திலும் திரு வருள் உடையோம். நன்மையில்லாத சமண சமயத்தில் அழுந்திய இந்த நாடும் நற்றமிழ் மன்னனும் உய்வு பெற்று வெற்றிகொள்ளும் திருநீற்று ஒளியினில் விளங்கும் மேன்மையையும் பெற்றோம்.

வகுப்பு – 23 **பஞ்சபுராணம் II**

**தேவாரம்**

திருநாவுக்கரசர் அருளிய ஆறாம் திருமுறை பதிகம் : 054 பாடல் 8
தலம் : திருப்புள்ளிருக்குவேளூர்
**பாடல் அமைப்பு** : திருத்தாண்டகம் **இராகம்** : அரிகாம்போதி / விருத்தம்

**பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்**
**பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்**
**வாராத செல்வம் வருவிப் பானை**
**மந்திரமுந் தந்திரமும் மருந்து மாகித்**

**தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்**
**திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட**
**போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்**
**போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே**

பேர்ஆயிரம் பரவி வானோர் ஏத்தும்
பெம்மானை பிரிவுஇலா அடியார்க்கு என்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித்
தீராநோய் தீர்த்து அருளவல்லான் தன்னை
திரிபுரங்கள் தீஎழத் திண்சிலைகைக்கொண்ட
போரானை புள்ளிருக்கு வேளூரானை
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே

**விளக்கம் :**

ஆயிரம் திருநாமங்களை முன்னின்று உச்சரித்துத் தேவர்கள் துதிக்கும் பெருமானாய்த் தன்னை விட்டு நீங்காத அடியவர்க்கு மீண்டும் பிறப்பில்லாத வீடுபேற்றுச் செல்வத்தை வழங்குபவனாய், மந்திரமும் அவற்றைச் செயற்படுத்தும் முறைகளும், மருந்துமாகித் தீராத நோய்களைப் போக்கியருள வல்லானாய், திரிபுரங்கள் தீப்பற்றிச் சாம்பலாகுமாறு திண்ணிய வில்லைக் கைக்கொண்டு போரிடுதலில் ஈடுபட்டவனான புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே.

**திருவாசகம்**

மாணிக்கவாசகர் அருளிய எட்டாம் திருமுறை 22 கோயில் திருப்பதிகம் பாடல் 5
**இராகம்** : மோகனம் **தாளம்** : ஆதி / விருத்தம்

**குறைவிலா நிறைவே கோதிலா அமுதே**
**ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே**
**மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்**
**மனத்திடை மன்னிய மன்னே**
**சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயுந்**
**திருப்பெருந் துறையுறை சிவனே**
**இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்**
**இனியுன்னை யென்னிரக் கேனே**

குறைவுஇலா நிறைவே கோதுஇலா அமுதே ஈறுஇலாக் கொழும்சுடர்க் குன்றே
மறையும் ஆய் மறையின்பொருளும்ஆய் வந்து என்மனத்திடை மன்னியமன்னே
சிறைபெறாநீர் போல் சிந்தைவாய்ப்பாயும் திருப்பெருந்துறை உறைசிவனே
இறைவனே நீ என்உடல் இடம்கொண்டாய் இனி உன்னை என் இரக்கேனே?

**விளக்கம் :**

முடிவில்லாத செழிப்பான ஒளி மலையே! வேதமாகிய மறையின் பொருளாகி என்னுடைய மனத்தின்கண் வந்து, நிலை பெற்ற தலைவனே! கட்டுப்படுத்தப்படாத வெள்ளம் போல என் சித்தத்தின் கண் பாய்கின்ற திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே! ஆன்ம நாதனே! நீ இப்பிறவியிலேயே என் உடம்பையே கோயிலாகக் கொண்டாய். இனிமேல் உன்னை யான் வேண்டிக் கொள்வது என்ன இருக்கிறது?
"இனி உன்னை என் இரக்கேன்" என்றது, இன்பமே வடிவான நீ, இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காது நின்றபின், உன்பால் யான் வேண்டிக் கொள்ளத் தக்கது யாதுளது? என்றபடி.

## திருவிசைப்பா

பூந்துருத்திநம்பி காடநம்பி அருளிய ஒன்பதாம் திருமுறை பதிகம் : 018 பாடல் 2
**தலம்** : திருவாரூர் **சிறப்புப்பெயர்** : திருவாரூர் பஞ்சமம்
**பண்** : பஞ்சமம் **இராகம்** : ஆஹிரி **தாளம்** : ஆதி

**பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்**
**பருகுதோ றமுதமொத் தவர்க்கே**
**தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்**
**திருவுரு இருந்தவா பாரீர்**
**சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த**
**தனிமுழு முதலுமாய் அதற்கோர்**
**வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி**
**விடங்கராய் நடங்குலா வினரே**

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோறும் அமுதம் ஒத்தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆருர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம் குலாவினரே.

**விளக்கம் :**

தேவர்களே! சிவபெருமானிடத்துப் பத்தியோடு தியானிப்பவர்கள் அவனுடைய அருளைப்பருக, அவர்கள் பருகுந் தோறும் அமுதம்போல அவர்களிடத்தில் அவ்வருள் இனிமை வழங்கும். இவருடைய அழகிய உருவம் ஒளி வீசிக் கொண்டிருப்பதைக் காணுங்கள். எம்பெருமானார் அருட்சத்தியாகியும், மங்கல மாகிய சிவமாகியும், உலகங்களை எல்லாம் படைத்த ஒப்பற்ற முழு முதற்பொருளாகியும், உலகங்கள் தோன்றுவதற்கு வித்தாகியும் விளங்கித் திருவாரூர் முதல்வராய் வீதிகளில் உலாவரும் அழகராய் அசபா நடனம் என்னும் கூத்து நிகழ்த்துகிறார்.

## திருப்பல்லாண்டு

சேந்தனார் அருளிய ஒன்பதாம் திருமுறை பதிகம் : 029 பாடல் 12
தலம் : கோயில்
**பண்** : பஞ்சமம் **இராகம்** : ஆஹிரி **தாளம்** : ஆதி

**ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்**
**அணியுடை ஆதிரைநாள்**
**நாராயணனொடு நான்முகன் அங்கி**
**இரவியும் இந்திரனும்**
**தேரார் வீதியில் தேவர் குழாங்கள்**
**திசையனைத்தும் நிறைந்து**
**பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்**
**பல்லாண்டு கூறுதுமே .**

**விளக்கம் :**

அழகினை உடைய ஆதிரைத்திருநாளில் தேவர் கூட்டத்தில் யாவர்யாவர் தரிசிக்க வந்தனர் எனின், திருமால், நான் முகன், அக்கினி, சூரியன், இந்திரன் முதலியோர் வந்தனர். தேர் ஓடும் வீதியில் தேவர் கூட்டங்கள் நாற்றிசையும் நிறைய, நிலவுலகெங்கும் நிறைந்த சிவபெருமானுடைய பழமையான புகழைப்பாடியும் ,அதற்கு ஏற்ப ஆடியும், அந்த ஆதிரை நாளை உடைய அப்பெருமான் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோமாக.

**பெரியபுராணம்**

சேக்கிழார் அருளிய பன்னிரண்டாம் திருமுறை திருமலைச் சருக்கம் பாடல் எண் : 253
**இராகம்** : மத்தியமாவதி **தாளம்** : சுத்தாங்கம் (விருத்தம்)

**தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்**
**திருநடங் கும்பிடப் பெற்று**
**மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு**
**வாலிதாம் இன்பமாம் என்று**
**கண்ணிலா னந்த அருவிநீர் சொரியக்**
**கைம்மல ருச்சிமேற் குவித்துப்**
**பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்**
**பாடினார் பரவினார் பணிந்தார்**

தெள் நிலா மலர்ந்த வேணியாய் உன் தன் திரு நடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம் ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவி நீர் சொரியக் கைம் மலர் உச்சி மேல் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவுஅரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்.

**விளக்கம் :**

வெண்மையான இளம்பிறை விளங்கும் திருச் சடையை உடையாய்! இந்நிலவுலகத்தில் உன்னுடைய ஆனந்தத் திருக்கூத்தை வழிபாடு செய்யும் பேறு பெற்று வந்த மானிடப் பிறவியே எனக்கு மேலான இன்பம் என்று, கண்களினின்றும் இன்பக் கண்ணீர் சொரிய, கைகளாகிய மலர்களைத் தலைமிசை வைத்துக் குவித்து, இசையோடு கூடிய அறிதற்கரிய திருப்பதிகத்தை இசைத்தார். போற்றினார், வணங்கினார்.

**வகுப்பு – 24**

**மீள்பயிற்சி வகுப்பு**

இதுவரை கற்றுக் கொண்டப் பதிகங்களை மீண்டும் மீள்பயிற்சி செய்தல்.

**திருச்சிற்றம்பலம்**